# சுற்றாடல் கல்வி



முன் பாடசாலைக் கல்விக்கான ஆசிரியர் அறிவுரை

மத்திய சுற்றாடல் அதிகார சபை
சுற்றாடல் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் கல்வி

## முன் பாடசாலைக் கல்விக்கான ஆசிரியர் அறிவுரை

மத்திய சுற்றாடல் அதிகார சபை

சுற்றாடல் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உள்ளடக்கப்பட்ட தலைப்புக்களை அந்தந்த ஒழுங்கு முறைப்படியே பின்பற்ற அவசியமில்லை.

ஒரு தலைப்புக்குரிய செயற்பாடுகளையும் அவ் ஒழுங்கு முறைப்படி செய்வது கட்டாயம் அல்ல.

இச்செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் இளம் பிள்ளைகளுக்கு அறிவைப் போன்றே திறன்கள் மற்றும் நல் எண்ணங்களை வளர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் அளித்து வழி காட்டுவோம்.

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவின் வெளியீடு.

முதலாம் பதிப்பு (தமிழாக்கம்) 2006

இவ் ஆசிரியர் கைநூல் பற்றிய உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்.

பிரதிப்பணிப்பாளர் நாயகம்.
சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு,
மத்திய சுற்றாடல் அதிகார சபை,
"பரிசர பியச"
இலக்கம் 104,
ரொபர்ட் குணவர்தன மாவத்தை,
பத்தரமுல்ல.
தொலைபேசி :- 2872297 - 2876641

பதிப்பகம் :- தீபாணி பதிப்பகத்தாரும் மற்றும் வெனியீட்டானரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1999 ஆண்டு பதிப்பின் ஆசிரியர் குழு.

பேராசிரியர் டீ.ஈ.எம். கொத்லாவல
ஓய்வு பெற்ற பேராசிரியர் (கல்வி)
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

திரு. மயூரா குணசிங்க
வெளி விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி. தயாரோஹன அத்துகோரல
கல்வி பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

## மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆசிரியர் குழு

திரு. மேர்வின் குணசேன
பணிப்பாளர் நாயகம்,
மத்திய சுற்றாடல் அதிகார சபை.

திருமதி. லலிதா பொன்சேகா,
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு

திரு. அனுர பீ. மாரசிங்க,
உதவி பணிப்பாளர்,
சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு

தமிழ் மொழிபெயர்ப்பு : எஸ். எம். ஸபருள்ளாகான், பரீனா ருஸைக்
சித்திரம் : ஸிபில் வெத்தசிங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலச் சுற்றாடல் நட்பாளர்களை உருவாக்குவதை முன் பாடசாலையிலிருந்து ஆரம்பிப்போம்.

பன் நூற்றாண்டுகள் நீண்டு செல்லும் வரலாற்றொன்றிக்கு உரித்துடைய எமது நாகரீகத்தின் ஆரம்பம் முதல் இயற்கையோடு மிக நெருக்கமான சூரியன், சந்திரன், மரம், செடி, கொடிகள், மிருகங்கள், பட்சிகள் மட்டுமின்றி நீர் மற்றும் மண்ணின் மீது சுற்றாடல் உணர்வுடன் கூடிய சிறந்ததொரு வாழ்வு முறை கட்டி எழுப்பப்பட்டிருந்தது. எனினும் கடந்த சில தசாப்தங்களாக எமது வாழ்க்கைப் போக்கிலும் பொருளாதாரத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் சாதாரணமாக சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் இடையில் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலவி வந்த சிறந்தொரு சுகஜீவனம் முறிவடைந்து இன்று சுற்றாடல் ரீதியான கடும் நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து விடுபடுவதற்கு எமது கடந்தகால அனுபவங்களால் திரட்டிக் கொண்ட அறிவுப் பொக்கிஷங்களை மட்டுமன்றி தொழில் நுட்ப அறிவையும் பயன்படுத்தி சுற்றாடலுக்கு உசிதமான எமது ஒழுக்க நெறிகளையும் வாழ்வு முறைகளையும், பழக்கப்படுத்திக் கொள்ளும் காலம் வந்துள்ளது.

சுற்றாடல் ரீதியான பிரச்சினைகளுக்கு எம்மை விட அதிகமாக வருங்கால சந்ததியினர் முகங்கொடுக்க வேண்டி இருப்பதால் ஆரோக்கியமானதொரு சுற்றாடலின் தேவைப்பாடு எம்மைவிட அவர்களுக்கே முக்கியமாகும். எனவே சிறு பிள்ளைகளை சுற்றாடலின் பாதுகாவலர்களாக நியமித்து சுற்றாடலைக் கட்டிக் காப்பதற்கு அமைப்பு ரீதியான செயற்பாடுகளை ஏற்படுத்துவது இன்று அவசரத் தேவையாக அமைந்துள்ளது.

நிகழ்காலத்தில் வாழும் மூத்த தலைமுறையினரின் கடமை யாதெனில் வருங்கால சந்ததிக்காக தான் வாழும் சுற்றாடலை அதன் இயற்கை வளங்களை பாதுகாப்பாக வருங்கால சந்ததிக்கு முதுசமாக வழங்குவதும் அதன் வள அடிப்படையை பாதுகாத்துக்கொள்ள அவசியமான ஒழுக்க நெறி மிக்க வருங்கால சந்ததியொன்று உருவாக வழி அமைப்பதுமாகும்.

இத்தேசிய பணியை நிறைவேற்றும் முகமாக சிறு வயது முதல் பிள்ளைக்கு தான் வாழும் சுற்றாடல் பற்றியும் சுற்றாடல் வளங்கள் மற்றும் அவற்றிற்கு இடையே நிலவும் நுண்ணிய தொடர்பு பற்றியும் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். முன் பாடசாலைக் கட்டத்திலுள்ள சிறு பிள்ளைகளின் மனதில் சுற்றாடல் நெருக்கம் மற்றும் சமூக உறவு பற்றிய கோட்பாட்டை விதைப்பதன் மூலமே சுற்றாடல் மீது நட்புக் கொண்ட மக்கள் சமூகமொன்றை கட்டி எழுப்ப முடியும்.

இப்பணியை நிஜமாக்கும் நோக்குடனே மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சுற்றாடல் கல்வி பற்றிய முன் பாடசாலை ஆசிரியர் கைநூல் இன்று உங்கள் கைகளுக்கு எட்டுகின்றது. முன் பாடசாலை ஆசிரிய பணிகள் என்ற வகையில் நீங்கள் அனைவரும் இவ் ஆசிரியர் கைநூலிலிருந்து உயர்ந்த பட்சப் பயனைப் பெறுவீர்கள் என நான் நம்புகின்றேன்.

கருணாசேன ஹெட்டியாரச்சி
தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பாடசாலைச் சுற்றாடல் கல்வியை பலப்படுத்துதல் காலத்தின் தேவை மட்டுமின்றி பிரதான தேவைப்பாடுமாகும்.

சுற்றாடல் கல்வி பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டும் பொழுது முன்பாடசாலை மட்டத்தை எவ்விதத்திலும் மறந்துவிட முடியாது. எனவே முன் பாடசாலை ஆசிரியர்கள் மூலம் சுற்றாடலைப் பாதுகாக்க முன்பாடசாலை பிள்ளைகளை வழிநடாத்த அவசியமான ஆசிரியர் அறிவுரைகளை பெற்றுக் கொடுப்பது மிகக் காலோசிதமானது.

எமது சுற்றாடலானது கடந்தகால சந்ததியினரிடமிருந்து கடனாகப் பெற்ற ஒன்று என்பதால் எதிர்காலப் பரம்பரைக்கு அதனை நல்ல முறையில் ஒப்படைப்பது இன்று வாழும் பரம்பரையின் கடமை என்பதை மறக்க முடியாது, இன்றைய சமுதாயத்தில் வாழும் முன்பாடசாலைப் பிள்ளை எதிர்காலத்தில் சுற்றாடலைப் பொறுப்பேற்க முன்வரும் வயது வந்தோனும் ஆவான்.எனவே முன் பாடசாலைப் பிள்ளைக்கு தன்னைச் சுற்றி வாழும் சுற்றாடலிலுள்ள வளங்களை இனங்கான வாய்ப்பு அளிப்பதும் சுற்றாடல் நட்பான எண்ணங்களை அதன் மூலம் கட்டி எழுப்ப முனைய வைப்பதும் அவசியமாகும். அவ்வாறே இயற்கை மீது அன்பு கொள்ளவும் சுற்றாடலின் உயிரினங்கள் மத்தியில் பிரதான இடத்தை வகிக்கும் மனிதன் மீது அன்பு கொள்ளவும் பிள்ளையை பழக்கப்படுத்துவதும் முக்கியமாகும். அதன் மூலம் பிள்ளைகளின் ஆத்மிக ஒழுக்க நெறிகளை வளர்த்துக் கொள்ள வழி நடாத்துவதும் முன் பாடசாலை ஆசிரியர்கள் மீதுள்ள விசேட பொறுப்பு என எண்ணுகின்றேன்.

இவ்வாறான ஆசிரியர் அறிவுரைகளை வழி நடாத்துவதன் மூலம் சிறுவர் பரம்பரையை 21 ஆம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான சுற்றாடல் சிந்தனை ஒன்றினால் போஷிக்கப்பட்ட பிரஜையாகச் செய்து சமூகத்தை வழி நடாத்த உகந்த வழிகாட்டுதலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

மேர்வின் குணசேன
பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

சுற்றாடல் நாம் அனைவரும் பிறப்பினால் முதுசமாகப் பெறும் ஒன்றாகும். பிறந்தது முதல் சுற்றாடலுக்கு பழகிக் கொள்ளும் பிள்ளையை சுற்றாடலுடன் சகஜீவனத்துடன் வாழ சிறு வயது முதல் பழக்கப்படுத்த வேண்டும்.

பிள்ளைகளை முறைசார் பாடசாலைகளுக்கு உட்படுத்த முன்னர் முன்பாடசாலை ஒன்றின் மூலம் தேவையான அடிப்படைத் திறன்களை வளர வைப்பதற்கான ஆர்வம் ஒன்று தற்சமயம் நிலவிவருகின்றது என்பது தெளிவாகும். முறைசார் கல்வி முறையினுள் ஒவ்வொரு பாடசாலை மட்டத்தில் சுற்றாடல் கல்வியை சம்பந்தப்படுத்தி கொள்ளும் விதத்தை விளக்க மூன்று பதங்களைப் பயன்படுத்தலாம். முன்பாடசாலையின் பிள்ளை சுற்றாடல் மூலம் கல்வியை ஆரம்பப் பாடசாலையில் சுற்றாடலைப் பற்றிப் படித்தலும் இரண்டாம் நிலை பாடசாலையில் சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக அல்லது சுற்றாடலிலிருந்து தேவையான திட்ட நுணுக்கங்கள் பற்றி ஆழமான அறிவைப் பெறுவதுமாகும். இறுதியில் பெறவேண்டிய அந்த ஆழ்ந்த அறிவிற்கான அடித்தளம் முன்பாடசாலைக் கட்டத்திலே இடப்பட வேண்டும்.

நற் பழக்கங்கள், உணர்வுகள், எண்ணங்கள் என்பவற்றை சிறு மனதில் இலகுவாக விதைக்க முடியுமென நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. சுற்றாடலின் சிற்சிலவற்றை பிள்ளைக்கு கற்பிக்கும் ஊடகமாக ஆக்கிக் கொள்வதால் பிள்ளையை சுற்றாடலுக்கு வழிநடாத்த, அவனுக்குள் சுற்றாடல் பற்றி நன்மையானதும் பல்வேறுபட்டதுமான உணர்வுகளின் தோற்றத்திற்கும் சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பான பழக்க வழக்கங்கள் மற்றும் எண்ணங்கள் வளரச் செய்யவும் உசித்தமான பின்னணி மற்றும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

சுற்றாடலின் ஊடாக முன்பாடசாலைக் கல்வியை அளிப்பதில் மேலும் பல பலன்கள் உண்டு. சுற்றாடல் நம் அனைவருக்கும் பொதுவான செல்வமாகும். பிள்ளைக்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க சுற்றாடலைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் செயற்கைப் பொருட்களுக்கு செலவாகும் பணத்தை மீதப்படுத்தி கொள்ளல், முன்பாடசாலை வயதிற்கு பொருத்தமற்ற கற்பித்தலிலிருந்து தவிர்த்து கொள்ளல் ஆகிய இருவகையான நன்மைகளை அடையலாம். முன் பாடசாலை ஆசிரிய, ஆசிரியை என்ற வகையில் நீங்கள் இதற்கு முன்பும் சுற்றாடல் தொடர்பான தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளுக்கு கற்பித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும் சுற்றாடலுக்கு வழிநடாத்துதல் என்பது அதுபற்றி அறிவை வழங்குவது மட்டும் அல்ல, சுற்றாடல் மீது விருப்புக் கொள்தல் முதலிய நல் எண்ணங்கள் மற்றும் சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட நற் பழக்கங்களை ஏற்படுத்துவதுமாகும்.

முன் பாடசாலைக் கல்வியின் நோக்கம் பிள்ளையின் பூரண அபிவிருத்திக்கு உதவுவதாகும். அறிவை மட்டும் வழங்குவதால் பூரண அபிவிருத்தி ஏற்படுவதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். சுற்றாடல் வாயிலாக அனுபவங்களையும் பெற்றுக் கொடுக்கும் பொழுது எல்லா வயது மட்டங்களுக்கும் பொருத்தமான செயற்பாடுகள் மற்றும் உரையாடல்களுக்குள் நன்மை, தீமை மற்றும் சரி, பிழை என்பவற்றை இனங்கண்டு கொள்ளவும், தனது வீடு, வாசல், பாடசாலை, சுற்றுச் சூழல் என்பன தொடர்பாக சரியான பழக்கங்கள் மற்றும் அபிலாஷைகளை கற்றுக் கொள்ளவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். மேலும் சுற்றாடல் அனுபவங்கள் வாயிலாக அவன் நிதமும் உருவமைக்கப்படுவதைக் காணலாம். கற்கை அனுபவங்களை செயற்கையான பொருட்கள் வாயிலாக பெற்றுக் கொடுக்கும் பொழுது அவ்வாறானவற்றிற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளவது மிகக் கடினமாகும். சுற்றாடலுக்கு பிள்ளையைப் பழக்கப்படுத்த முன்பாடசாலையில் அனேகமாக உபயோகிக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள் பயனற்றவை ஆகின்றன என இத்தால் புது அணுகுமுறைகளை கற்கும் பொழுது உங்களுக்கு புலப்படும் என்பதில் சந்தேகமில்லை.

லலிதா பொன்சேக்கா
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

தலைப்பு | பக்க இலக்கம்


01. சூரியன் 01

02. மழை 05

03. வளி 10

04. பறவைகள் 13

05. காற்று 16

06. நமது அயலவர் 19

07. எமது வைபவங்கள் 22

08. மலர்கள் 25

09. நீர் 29

10. பாடசாலையையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்திருத்தல். 34

11. எம்மைச் சுற்றியுள்ள மரங்கள் 38

12. எம்மைச் சுற்றியுள்ள செடி, கொடிகள் 42

13. எமக்கு உதவுவோர் 46

14. பழங்கள் 50

15. மிருகங்கள் 54

16. எம்மைச் சுற்றியுள்ள மண் வகைகள் 58

17. எமது விளையாட்டுக்களும் பழக்க வழக்கங்களும் 62

18. எமது வீட்டையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் 66





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. சூரியன்.

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்.

### பிள்ளைகள்

1. சூரியன் மூலம் எமக்கு வெளிச்சம் கிடைக்கிறது என அறிந்து கொள்கின்றனர்.
2. காலையில் சூரியன் உதித்தல், மாலையில் மறைதல் முதலிய இயல்புகளை அவதானிக்கின்றனர்
3. சூரியனின் வெளிச்சம் காரணமாக அதனை நேரே பார்க்க முடியாது என்பதனையும் சூரிய கதிர்களால் ஏற்படும் வெப்பம் பற்றியும் அனுபவ ரீதியாக அறிந்து கொள்கின்றனர்.
4. சூரிய வெளிச்சம் மற்றும் வெயிலினால் கிடைக்கும் பலன்களைப் புரிந்து கொள்கின்றனர்.
5. சுத்தத்தைப் பாதுகாக்க வெய்யிலை (சூரிய வெளிச்சத்தை) பயன்படுத்த பழகிக் கொள்கின்றனர்

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| வானத்தில் மேகங்கள் நிறைந்துள்ள மழை நாட்களில் சூரியனைக் காண முடியாது எனவும் மேகம் இல்லாத நாட்க -ளில் சூரியனை காண முடியும் எனவும் அறிந்து கொள்ளல். | சூரியனைக் காட்டும் படம் | சூரியன் உதிக்கும் காலம் பகல் என்பதையும் சூரியன் மறைந்த பின்னரான காலம் இரவு எனவும்அறிமுகப்படுத்தும் முகமாக கலந்துரை யாடுங்கள்.<br>பகலிலும், இரவிலும் செய்யும் வேலைகள் (தூங்குதல் முதலிய) பற்றிக் கலந்துரையாடுங்கள். |
| காலையில் (பாடசாலை லைக்கு வரும் பொழுது) சூரியன் வானத்தின் கீழும், பகலில் வீட்டிற்குச் செல்லும் வேளையில் உச்சியிலும் இருப்பதாக அறிந்து கொள்ளல். | சூரியன் எழுதல் உச்சிக்குச் செல்வதைக் காட்டும் படம் | அவதானிப்பு/ அனுபவம் வாயிலாக விடயங்களை தொடர்பு படுத்திக் காட்டுங்கள்.<br>பாடசாலைக்கு வரும் வேளையில் மற்றும் பாடசாலையிலிருந்து வெளியேறிச் செல்லும் வேளையில் வானில் சூரியன் புலப்படும் இடம் மற்றும் விதம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| சூரிய வெளிச்சத்துடன் தொடர்புடைய உஷ்ணம் பற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல்.<br><br>பகலின் உஷ்ணம் கடின மானது எனவும் கடும் வெயிலில் வெகு நேரம் நிற்க முடியாது எனவும் புரிந்து கொள்ளல். (வியர்த்தல்) | வெய்யிலில் நிற்கும் பிள்ளைகள் மற்றும் மரத்தடி நிழலில் நிற்கும் பிள்ளைகள் | காலை வெய்யில் இதமானது. உஷ்ணம் கடினமானது அல்ல எனவும் சுகமானது எனவும் வெய்யிலினால் ஏற்படும் உஷ்ணம் அதிகரித்தல் பற்றி அறிந்து கொள்ள பிள்ளைகளை வெய்யிலிலும் நிழலிலும் மாறி, மாறி சிறிது நேரம் நிற்க இடமளியுங்கள். மண் சூடாகுதல், கற்கள் சூடாகுதல்.<br><br>மணல்மீது கால் வைத்துப் பார்க்க இடமளியுங்கள். சூரிய உஷ்ணம் விழாத மரமொன்றின் கீழ் உள்ள குளிர்ச்சியை அறிந்து கொள்ள இடமளியுங்கள்.<br><br>அவ் அனுபவம் பற்றி கலந்துரையாடுங்கள். |
| சூரியனால் கிடைக்கும் நன்மைகள் பற்றி கலந்துரையாடுங்கள்.<br><br>வீட்டில் உடைகளை உலர வைத்தல். | - கைக்குட்டை<br>- நீர்.<br>- பாத்திரம். | கைக்குட்டை ஒன்றை துவைத்து வெய்யிலில் உலர வையுங்கள்.<br><br>உடைகளை உலரச் செய்ய முடியும் எனப் புரிந்து கொள்ளச் செய்யுங்கள்.<br><br>உடைகளை வெய்யிலில் உலரச் செய்வதில் உள்ள நன்மைகளை கலந்துரையாடி தினசரி அணியும் உடைகளை உலர வைத்துக்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். ஜன்னல், கதவுகளைத் திறந்து வைப்பதால் வீடு வெளிச்சம் அடைகிறது என்பதை சுட்டிக் காட்டுங்கள. |
| நீர், குட்டைகள் உலர் வடைதல் சூரிய வெளிச்சம் கிடைக்காத பட்சத்தில் மரம் செடிகளின் நிறம் மாறுதல் போன்றவற்றைக் காணுதல் | - நன்கு புற்கள் வளர்ந்த இடமொன்று.<br><br>- செங்கல் /தேங்காய்ச் சிரட்டை. | புற்களின் மீது சூரிய ஒளி விழாதவாறு செங்கல் ஒன்றை வையுங்கள். சில நாட்களின பின்னர் செங்கல்லை அகற்றிப் பார்க்க இடமளியுங்கள். சூரிய ஒளி விழாது விட்டாலும் கூட புற்களின் நிறம் மாறுவதைக் கூறுங்கள். மனிதர்களுக்கு மட்டுமன்றி மரஞ் செடிகளின் வளர்ச்சிக்கும் சூரிய ஒளி அவசியம் என்பதை இவற்றின் வாயிலாக கலந்துரையாடுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன்

கதிரவனே எழுகிறதே
கருமையிலா உதயமிதே
புதிய காற்றுவரும் - பூக்கள் அழகுதரும்
புலரும் காலையே - மனம் மகிழ்ந்திடும்

ஆனந்த ராஜகருணா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. மழை

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்.

### பிள்ளைகள்

1. மழை நாளொன்றில் வானம் மற்றும் சூழவுள்ள பகுதிகளைப் பற்றி கலந்துரையாடி அறிந்து கொள்கின்றனர்.
2. மழை பெய்யும் சந்தர்ப்பத்தில், தூறல் மழை, கடும் மழை மற்றும் அத்துடன் ஏற்படும் மழை பெய்யும் ஒசை மற்றும் வேறு ஓசைகளை இனம் கண்டு கொள்ளல்.
3. மழை நாளொன்றில் மனிதர்கள் நடமாடும் விதம், பிள்ளைகள் செய்யும் வேலைகளை அவதானித்தல்.
4. மழை இன்மையால் சுற்றுச் சூழலிலுள்ள மரஞ்செடி கொடிகள் வாடிப் போகுதல், கால்வாய், ஊற்றுக்கள், கிணறுகள் வரண்டு போகுதல் பற்றியும் மழையினால் பயிர்கள் மரம் செடி கொடிகள் ஈரப்பதனைப் பெற்று புத்துயுர் பெறுவது பற்றியும் கதைத்தல்.
5. ஓடும் நீரில் மண் அரித்துச் செல்தல், மழை நீரினால் அடித்துச் செல்லப்பட்ட உரம் ஓரிடத்தில் குவித்திருத்தல் என்பவற்றை அவதானித்து அறிந்து கொள்கின்றனர்.
6 மழையை உருவகப்படுத்த சித்திரங்களை வரையும், பாடல்களைப் பாடும் நிகழ்வுகளை விபரிக்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல்/ நடவடிக்கைகள். |
|---|---|---|
| மழை நாளில் வானத்திலும் சுற்று வட்டத்திலும் ஏற்படும் மாற்றங்கள், பிள்ளைகளுக்குச் சுட்டிக் காட்டுதல் (மழை நாளில்) பிள்ளைகளுடன் முன்னைய அனுபவங்கள் வாயிலாக அது பற்றி கதைத்தல் | இயற்கைச் சுற்றாடல் (இச் செயற்பாடுகளுக்கு மழை நாள் மிகப் பொருத்தமானது) | மழை நாளில் வானம் இருளடைதல் மற்றும் மேகங்கள் உருவாகுவதைப் பார்க்க பிள்ளைகளை வழி நடாத்துங்கள்.<br><br>மழை நாளொன்று ஏனைய நாட்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதைப் பற்றி கலந்துரையாடுங்கள். |
| மழை பெய்யும் வேளையில் ஏற்படும் ஓசைகள், மழைத் துளிகள், கடும் மழையின் ஓசை, வானத்தின் குமுறல், ஒலி,மழை குறைந்து செல்லும் வேளையில் இலைகள் மீது மழைத் துளிகள் விழுதல் மற்றும் நீர் ஓடும் ஓசைக்குச் செவிமடுத்தல். | மழை நாளில்<br>- மழைத் துளிகள்<br>- மழை நீர் | மழை பெய்யும் வேளையில் ஏற்படும் ஓசையைக் கேட்க வழி நடத்துங்கள்.<br><br>கடும் மழை, தூறல் மழை என்பவற்றை இனங் கண்டு அது பற்றிகதைக்க ஊக்கம் அளியுங்கள்.அவ் ஒலிகளை எதிரொலிக்க செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| மழை நாளில் மனிதர்கள் நடமாடும் விதம் பற்றி அவதானித்தல், மனிதர்கள் குடைகளைப் பிடித்துக் கொண்டு உடைகளை சற்று உயர்த்திப் பிடித்தவண்ணம் வேகமாகச் செல்லுதல். | படம் | பிள்ளைகள் காண்பவற்றைப் படங்கள் மூலம் வெளிப்படுத்தல், முன் வைத்தல். |
| வேகமாக நடத்தல், பிள்ளைகள் மழை உடுப்புகளை அணிந்து கொண்டுசெல்லல் போன்ற வற்றை காணுதல். நீரில் மிதந்து செல்ல காகித ஓடங்களைத் தயாரிக்க வழிநடத்தல், பிள்ளைகள் மழையில் நனைந்த வண்ணம் செல்வதைக் காணுதல்.<br><br>தயாரிக்கப்பட்ட காகித ஓடங்களை சிறியது, பெரியது என இனம் காணுதல். | - ஓடம் தயாரிப்பதற்கான காகிதம்<br>- பெரிய காகித ஓடங்கள்<br>- சிறிய ஓடங்கள். | அவர்கள் நனையாது செய்ய முடியுமாயின் காகித ஓடங்களைத் தயாரித்து மிதக்கவிட வாய்ப்பு அளியுங்கள்.<br><br>சிறியது, பெரியது எனத்தெரிவு செய்து ஓடங்களை மிதக்க விடுங்கள். |
| மழை பெய்யாமையின் பலாபலன்களை படங்கள் வாயிலாக கலந்துரை யாடுங்கள்.<br><br>உ-ம்:- மரம், செடிகள் வாடுதல், கிணறுகள் வற்றிப் போகுதல் மிருகங்கள் அருந்த நீர் இல்லாமற் போகுதல் போன்ற விடயங்களை அறிந்து கொள்ளல். | வற்றிய கிணறுகள், ஓடைகள் கால்வாய்கள், நதிகள் மற்றும் காய்ந்து போன மர இலைகள் உள்ள பிரதேசங்களைக் காட்டும் படங்கள். | மழை கிடைக்காததனால் மரம்செடி, கொடிகள், புற்கள், பயிர்கள் காய்ந்து போகும் விதம், குளங்கள் வற்றிப் போகுதல் என்பன பற்றி படங்கள் வாயிலாக கலந்துரையாடுங்கள். மழை நீர் கிடைப்பதனால் ஏற்படும் மாற்றங்கள் பற்றி கலந்து ரையாடுங்கள்.<br><br>காடுகளிலுள்ள பாரிய மரங்களை வெட்டுவதனால் மழை இல்லாமற் போவது பற்றியும் நாம் பெரிய மரங்களைப் பாதுகாத்துக் கொள்வது மற்றும் வளர்ப்பது பற்றியும் கலந்துரை யாடுங்கள். பிள்ளைகளின் அனுபவங்களை வெளியிட சந்தர்ப்பம் அளியுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| மழைகிடைத்த பின்னர் புத்துயிர் பெற்று பச்சை நிறம் அடைவதைக் கண்டு களிக்கவும் மழையை வரவேற்கவும் முனைதல். மண் அடித்துச் செல்லல் மற்றும் முற்றத்தில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தல். | - வளவில் மழைநீர் வீழ்ந்து குழியாகும் இடமொன்று. -பீலியிலிருந்து மழை நீர் வீழ்ந்த இடமொன்று (இருக்குமாயின்) | முற்றம், பாடசாலை வளவு என்பவற்றை மழைக்குப் பின்னர் அவதானித்து அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி கலந்துரையாடுங்கள். |
| மழையை உருவகித்துக் காட்ட சித்திரம் வரைதல், பாட்டுப் பாடுதல். | காகிதம், நிறச் சுண்ணாம்புக் கட்டி, நிறப்பென்சில் | பிள்ளைகள் பாடவும், சித்திரம் வரையவும், மழையை உருவகித்து நடிக்கவும் சந்தர்ப்பம் அளியுங்கள். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாரகை

கண்சிமிட்டும் வானத்திலே
கணக்கிலாத தாரகை
பூக்கள் போல வானத்தில்
புன்னகைக்கும் தாரகை
இரவு சூழும் நேரத்திலே
இலங்கும் வண்ணத் தாரகை
எடுத்திடவோ கொடுத்திடவோ
முடிவதில்லை யார்க்குமே

- ஆனந்த ராஜகருணா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. வளி

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. எம்மைச் சுற்றி வளி இருக்கிறது என்பதை அறிந்து கொள்கின்றனர்.
2. வளி அசுத்தமடையும் விதம் பற்றிய விடயங்களைத் தேடி அறிந்து கொள்கின்றனர்.
3. வளியை சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல்/ நடவடிக்கைகள். |
|---|---|---|
| எம்மைச் சுற்றி வளி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள சில பரீட்சார்த்தங்களைச் செய்து பார்த்தல்.<br><br>உ-ம்:-<br>வேகமாக மூச்சு வாங்குதல், வெளிவிடுதல், பலூனை நிரப்புதல், காலியாக்குதல். | - பலூன் ஒன்று<br>- ஊதுவதற்காக பப்பாசிக் குழல் ஒன்று | பிள்ளைகளைக் கொண்டு பலூன்களை ஊதவிடுங்கள் நிறைந்தபின் ஒரே தடவையில் அதன் வளியை வெளியாக்கச் செய்யுங்கள். குழல் ஒன்றினால் அல்லது நேரடியாக அல்லது கைகளுக்கு ஊதிப்பார்க்க வையுங்கள். |
| வளி அசுத்தமடையும் விதம் பற்றி கலந்துரை யாடுதல். | - புகை பிடிப்பவர்களை காட்டும் படமொன்று<br><br>- தொழிற்சாலைக் குழாய் ஒன்றிலிருந்து புகை வெளி யேறும் படமொன்று<br><br>- அசுத்தமான சாக்கடை கான்கள், அசுத்தமான மலசலகூடம், வீட்டுக் குப்பைகூளங்களைக் காட்டும் சித்திரம்/ புகைப்படம் என்பன. | சூழலில் துர்நாற்றம் பரவ ஏதுவான பொருட்களைச் சேர்க்காது இருக்கும் பழக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.<br><br>உ-ம்:-<br>முறையாக குப்பை கூளங்களை அகற்றுதல், மலசலகூடங்களை. துப்பரவாக வைத்திருத்தல் போன்ற பழக்கங்களை ஏற்படுத்தல். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| எம்மைச் சுற்றியுள்ள காற்றை சுத்தமாக வைத்திருக்க சிரத்தை கொள்வது பற்றி பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுதல். அதற்கான பொறுப்பை ஏற்கபடிப்படியாக வழி நடத்துதல் எம்மைச் சுற்றி துர்நாற்றம் வீசும் இடங்களைத் துப்பரவாக வைத்திருக்கும் விதம் பற்றி உரையாடுதல். | சுத்தமான காற்றோட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் சூழலொன்றைக் காட்டும் படங்கள் | சுற்றுச் சூழலை நன்கு சுத்தமாக வைத்திருக்க பிள்ளைகளை வழி நடத்தல்.<br><br>உ-ம்:<br>குப்பை கூளங்களை சுற்றுச் சூழலில் போடாதிருக்க பழக்குதல். எச்சில்களை கண்டபடி துப்பாது இருக்க பழக்குதல்.<br><br>மலசலகூடங்களை துப்பரவாக வைத்திருக்கப் பழக்குதல்.<br><br>வீணாக கடும் தூசியை கிளப்பாதிருக்க பழக்குதல்.<br><br>விரைவாக வேர்விடும் புற், செடிவகைகளை வளர்க்க பிள்ளைகளை வழி நடத்துதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. பறவைகள்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்.

1. சுற்றச் சூழலில் அடிக்கடி காணும் பறவைகளை அவதானித்து இனங் கண்டு கொள்கின்றனர்.
2. பறவைகளின் அமைப்பு, அவற்றின் குரல்கள் பற்றி அறிந்து கொள்ள பழகுகின்றனர்.
3. பறவைகள் பற்றிய கதைகளைக் கேட்க, பாட்டுப் பாட குரலோசையை எதிரொலிக்க முயற்சிக்கின்றனர்.
4. பறவைகளுக்கு உணவு, நீர் அளிக்கவும் அவற்றிற்கு துன்பம் இழைக்காதிருக்கவும் பழகுகின்றனர்.


| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| குழுவாக பாடசாலை தோட்டத்திற்குச் சென்று பாடசாலைச் சுற்றுச் சூழலிலுள்ள பறவைகளை அவதானித்தல். (அவற்றின் சொண்டு, அவற்றின் நிறம், அவற்றின் பயணம் பற்றி விபரிக்க) | இயற்கை சூழலில் காணக்கூடிய பறவைகள் | தோட்டத்திற்குச் செல்ல முன்னர் அவதானிக்க வேண்டிய விடயங்கள் பற்றி பிள்ளைகளுக்கு விளக்குங்கள். பிள்ளைகளுக்கு அவர்கள் கண்டவற்றை கலந்துரையாட வாய்ப்பு அளியுங்கள். அமைதியாக பறவைகளைப் பார்க்க பிள்ளைகளை வழி நடத்துங்கள். |
| தோட்டத்திற்குச் சென்று பறவைகளின் ஓசைகளுக்குச் செவிசாய்த்தல். குரல் மூலம் பறவைகளை இனங் காணுதல். | தோட்டத்திற்குச் சென்று சமீபமாகவும், தூரத்திலிருந்தும் கேட்கும் பறவையின் குரலோசை.<br>உ.ம்<br>காகத்தின்.............................<br>...............................................<br>சேவலின், புறாவின்<br>- பல வர்ணங்களில் வரையப்பட்ட பறவையின் படங்கள்.<br>- சேகரிக்கப்பட்ட பறவைகளின் இறகுகள். | கேட்கும் குரலை எதிரொலிக்கச் செய்யச் சொல்லுங்கள். வீட்டிலும் பறவைகளின் குரலொலிக்கு செவிசாய்த்து பறவைகளை பெயர் ரீதியாக இனங்கண்டு கொள்ள ஊக்கம் அளியுங்கள். காண்பவற்றை பிள்ளைகளுடன் கலந்துரை யாடுங்கள். மேலும் படங்களைச் சேகரித்துக்கொள்ள அவர்களை ஊக்கப்படுத்துங்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பறவைகளின் கூடு வகை<br><br>கூடுகளின் அமைப்பு, பறவைகள் மரங்களில் கூடுகளை அமைப்பது பற்றி அறிந்து கொள்ளல். | பறவைக் கூடுகள்,(இயற்கையான) கூடுகளின் பெரிய படங்கள், கூடுகள் மற்றும் பறவை முட்டைகளின் மாதிரிகளைத் தயாரிக்க அவசியமான பொருட்கள் - தயாரிக்கப்பட்ட கூடுகளை வகுப்பறைக்குக் கொண்டு வரக்கூடிய கிளை ஒன்று. | வகுப்பறைக்குக் கொண்டு வரப்பட்ட குருவிக் கூடு பற்றி கலந்துரையாடுங்கள். முட்டையிட கூடு தயாரிக்கப்படுவதாகவும் குஞ்சுகள் பறந்து செல்லும் வரை அதில் வளர்வதாகவும் வலியுறுத்துங்கள். அதனால் பறவைக் குஞ்சுகளுக்கு கிடைக்கும் பாதுகாப்பு பற்றி பிள்ளைகள் கலந்துரையாட ஊக்கம் அளியுங்கள். |
| பறவைகள் பற்றிய கதைகளைக் கூறல், பறவைகள் பற்றிய பாடல்களைப் பாடுதல், பறவைகளை வரையவும், வடிக்கவும் செய்தல். | - காகமும் குடமும் போன்ற கதைகளுக்கு அவசியமான படங்களும் படப் புத்தகங்களும்.<br>- புத்தகங்கள். காகிதம், நிறப் பென்சில்கள், களிமண், பறவை இறகுகள், பஞ்சு. | பறவைகள் மீது அன்புகொள்ள வைக்கும் கதைகளை வாசித்து அவை பற்றி உரையாடுங்கள். பறவை கூடுகளுக்கு சேதம் ஏற்படுத்தக் கூடாது எனக் கூறும் பாடங்களை முன் வையுங்கள். சிருஷ்டி செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள். |
| பறவைகளுக்கு அன்புடன் உணவு, நீர் வழங்குதல்.<br><br>பறவைகள் மீது அன்பு செலுத்தல்.<br><br>பறவைகள் உணவாகக் கொள்ளும் பொருட்கள் தானியம், பழங்கள். பற்றி அறிந்து கொள்ளல். | - பறவைகள் குடிக்க நீர் வைக்கவும்.<br>- உணவுப் பாத்திரமொன்று.<br>- தானிய வகைகள்<br>- பழங்களை உட்கொள்கின்றன என்பதைக் காட்டும் படங்கள். | தினசரி உணவு மற்றும் நீர் வழங்குவதனால் பறவைகள் தோட்டத்திற்கு வருவதாக அவர்களுக்குச் சுட்டிக் காட்டுதல்.<br><br>மலர்கள், கனி வகைகள் உள்ள பூத்துக் குலுங்கும் வீட்டுத் தோட்டமொன்றுக்கு பறவைகள் அடிக்கடி வந்து செல்வதாக புரிய வையுங்கள். |
| பறவைகளின் படங்கள் பறவை இறகுகளைத் தெரிவு செய்தலும் கணக்கெடுத்தலும். (5,6 என) | - பல்வேறு பறவைகளின் படங்கள்.<br><br>- பறவை இறகுகள். | நிறம் மற்றும் அளவிற்கு ஏற்றவாறு படங்கள்./ இறகுகளுக்கு நிறம் பூசச் செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறவைகள்

குக்குக் கூ

இலை சரசர
பனி சிலு சிலு
கேட்கும் போது
குக்குக் கூ

கதவாடி மரம்
உயர் கிளைதனில்
இறங்கிடாமல்
குக்குக் கூ

கதிரவன் வரும்
செய்தியை முழு
ஊர்க்கும் தரும்
குக்குக் கூ

ஆனந்த ராஜகருணா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 05. காற்று

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்.

1. சுற்றிவரக் காற்று இருக்கும் பொழுது அது பற்றித் தெரிந்து கொள்கின்றனர்.
2. கடுங் காற்று வீசும் நேரத்தில் காண்பவை, கேட்கும் ஒலிகள், உணர்பவை என்பன பற்றிய அனுபவத்தைப் பெறுகின்றனர்.
3. காற்றினால் ஏற்படும் சேதங்கள் பற்றி தேடிப் பார்க்கின்றனர். கேட்டு அறிந்து கொள்கின்றனர்
4. காற்றினால் பெறப்படும் பயன்களை இனங் கண்டு கொள்கின்றனர்.
5. காற்றுள்ள நாளொன்றில் பட்டம் விடுதல். காற்றைப் போல் அபிநயம் செய்தல் முதலிய பல்வேறு செயற்பாடுகளால் மகிழ்ச்சி அடைகின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| காற்றுள்ள நாளில் சுற்றுச் சூழலில் ஏற்படும் வேறுபாடுகளை அவதானித்தல்.<br><br>மரங்கள் காற்றில் அங்குமிங்கும் அசைந்தாடுதல். (உன்னிப்பாக கவனித்தல்) | - காற்று வீசும் சந்தர்ப்பம்.<br>- காற்றில் மரங்கள் வளைவதைக் காட்டும் படங்கள்.<br>- தூக்கிப் பிடித்துள்ள குடை வளைந்து செல்வதைக் காட்டும் புகைப்படம். (இச் செயற்பாடுகளுக்கு ஓரளவுக்கேனும் காற்றுள்ள நாளொன்று பொருத்தமானது) | காற்றைப் பற்றி உரையாடுதல்.<br>வேகமாக அடிக்கும் காற்று காற்றுடன் சம்பந்தப்பட்ட சொற்கள், காற்று, கடுங் காற்று புயல் என்பன. |
| காற்றுள்ள நாளில் கேட்கும் ஓசைகள், மென் காற்றின் ஓசை என்பவற்றிக்கு செவிசாய்த்தல்<br>(அவ்வாறான சந்தர்ப்பங்களில்) அசைந்தாடுதல் மோதுதலினால் சர சரவென்று ஆடும் முறையையும் காற்றில் அசைந் தாடும் மரங்கள், கிளைகளையும் அவதானித்தல். | வகுப்பறையில் தொங்க விடப்பட்டுள்ள தானாக காற்றில் ஆடும் விளையாட்டுபொருள்.<br><br>காற்றினால் மரங்கள் வளைந் துள்ள நிலையைக்காட்டும் படம். | காற்றில் அங்கும் இங்கும் அசைந்தாடும் பொருட்களைத் தூக்கி வைத்து காற்று வீசும் பொழுது அவை ஒன்றோ டொன்று மோதுவதனால் ஏற்படும் ஓசையைக் கேட்கச் செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| கடுங் காற்றினால் ஏற்படும் சேதங்களை அறிந்து கொள்ளல். (மரங்கள் வேரோடு சாய்தல், மரங்களின் கிளைகள் முறிந்து போதல்) என்பவற்றை அவதானித்தல்). | காற்றினால் வேரோடு சாய்ந்த மரங்கள், உடைந்த வீடுகள் குடைகளைப் பிடித்துக்கொண்டு போக முடியாமை முதலியனவற்றைக் காட்டும் படங்கள். | காற்றினால் சுற்றுச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், ஏற்படும் சேதங்கள் பற்றி கலந்துரையாடுதல் (இயற்கையான வாய்ப்புக்கள் இல்லாவிட்டால் படமொன்றைப் பயன் படுத்துங்கள்.) |
| சில வீடுகளின் கூரைகள் காற்றினால் சேதமடைந்துள்ளமையை அவதானித்தல். | படமொன்றின் மூலம். காற்றினால் செல்லும் கப்பல்களின் படங்கள், காற்றினால் சுழலும் பெரிய ஆலைகளின் படங்கள். | வீழ்தல், முறிந்து வீழ்தல் மிதத்தல், புயல் போன்ற சொற்கள் பொருள் விளங்கக் கூடியதாக உரையாடுதல். பிள்ளைகள் கேள்வியைக் கேட்கச் செய்யுங்கள். |
| காற்றினால் பெறப்படும் பலன்களைக் கற்றல், விசிறிகள் சுழல்தல், மென்காற்றில் பட்டம் விடுதல் சில மரங்களின் காய்கள் காற்றில் இயற்கையாக அடித்துச் செல்லும் விதத்தை அவதானித்தல், காற்றாடி முதலியவை சுழல்தல், காற்று குளிரடைந்து வியர்வை உலர்தைப் பற்றி பிள்ளைகளின் கவனத்தைச் செலுத்த வைத்தல். | -காற்றினால் அடித்துச் செல்லும் விதைகள். | பட்டம், விசிறி என்பவற்றைத் தயாரித்து மென் காற்றின் உதவியால் களிப்படையச் செய்தல். காற்றினால் பெறப்படும் பலன்களைப் பற்றி உரையாடுதல். மின் காற்றாடி மூலம் காற்றை உருவாக்குதலும், யன்னல் கதவுகளைத் திறந்து வைப்பதன் மூலம் வகுப்பறையின் அல்லது வீட்டின் காற்றோட்டத்தைக் குளிரயடையச் செய்வது பற்றியும் உரையாடுங்கள். காற்றிலிருந்து சிறு செடிகளைக் காப்பாற்றிக் கொள்ளும் விதம் பற்றி கலந்துரையாடுங்கள். |
| காற்றைப் பற்றிய பாட்டுக்களைப் பாடிய வண்ணம் கதைகளைக் கூறவும். சித்திரங்களை வரையவும் தாளத்திற்கு ஏற்ப அங்க அசைவுகளில் ஈடுபட வைத்தல் | -படங்கள். - காகிதம், நிறப்பென்சில். -மாற்று சங்கீதப் பொருட்கள். | காற்றை உருவகித்துக் காட்டும் தாளத்திற்கு ஏற்றவாறான அளவுகள் மற்றும் ஓசைகள் மூலம் காற்றின் தன்மையை நடித்துக் காட்ட வைத்தல். காற்றைப் பற்றி பாட்டு இசைக்கச் செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று



அங்கும் இங்கும் சுற்றி வரும்
காற்று காற்று என்ன நிறம்?

என்னுடலைத் தொட்டுச் செல்லும்
காற்று காற்று என்ன நிறம்?

யார் கையிலும் சிக்கிடாத
காற்று காற்று என்ன நிறம்

கடலை போல புல்வெளி போல
நிறம் தானோ காற்றின் நிறம்?

- ஆனந்த ராஜகருணா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. நமது அயலவர்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. அயலிலுள்ள மனிதர்களை இனங் கண்டு கொள்கின்றனர்.
2. அவர்களது பேசும் முறை, நடை, உடை, பாவனை என்பவற்றை அவதானிக்கின்றனர்.
3. அயலவருடன் கௌரவமான முறையில் கதைக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.
4. அபிநயம், படங்கள் மற்றும் பாட்டுக்கள் மூலம் அவர்கள் பற்றிய பிள்ளைகளின் அனுபவங்களை வெளிப்படுத்துகின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| அயலவரைப் பற்றி உரையாடுதல்.<br>உ-ம் : ஆசிரியர், வைத்தியர், தாதி, உறவினர்,நண்பர்கள் மரக்கறி வியாபாரி, மீன் வியாபாரி.<br><br>தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களின் தொழில்கள் பற்றிய விடயங்களை இனம் காணுதல். | - புகைப்படங்கள்<br>- சம்பந்தப்பட்ட மனிதர்கள் (உண்மையான)<br>- மாதிரிப் படங்கள். | தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களைப் பற்றி உரையாடுங்கள்.<br><br>முடியுமான சந்தர்ப்பங்களில் அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து அவர்களுடன் உரையாட வாய்ப்பு அளியுங்கள்<br>பிள்ளைகள்.<br>பிள்ளைகளுடனும், ஆசிரியர் பிள்ளைகளுடனும்.<br><br>தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இனங் கண்டு உரையாடுங்கள. |
| அந்தந்த மனிதர்களின் பேசும் முறை, நடை, உடை, பாவனை பற்றி தேடி அறிதல். | - மனிதர்கள் (உண்மையான)<br>- அடிக்கடி பாதையில் செல்வோர். | ஒவ்வொருவரினதும் உடைகள் பற்றி விளக்குங்கள்.<br>உ-ம்<br>ஆசிரியை - சாரி<br>தாதி - சீருடை<br>மீன்வியாபாரி - சாரம்<br>நடக்கும் விதம் -<br><br>ஆசிரியை வழமையான நேரத்தில் போகிறார்.<br>மீன் வியாபாரி - பாரத்தைச் சுமந்து செல்வதால் வேகமாக நடக்கின்றார்.<br><br>பேசும் விதம்<br>மீன் வியாபாரி உரத்த குரலில் பேசுதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
| --- | --- | --- |
| சமூகத்தில் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உதவும் விதம் பற்றி உரையாடுங்கள். | - பட மாதிரிகள்<br>- படப் புத்தகம் | - சமூகத்தில் இவர்கள் அனைவருக்கும் ஒவ்வொருவரிடமிருந்து கிடைக்கும் உதவி பற்றியும் உரையாடுங்கள்.<br><br>- பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவும் வியாபாரிகளைப் போன்று சுறு சுறுப்பாக இயங்க ஊக்கம் அளியுங்கள்.<br><br>- பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒழுக்கமான முறையில் பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள உதவி செய்யுங்கள். |
| அபிநயம், படங்கள், பாட்டுக்கள் மூலம் பிள்ளைகளின் அனுபவங்களை வெளிப்படுத்துதல். | காகிதம், வர்ணபென்சில்கள்.<br>- வர்ண உடைகள், காட்போர்ட் பெட்டி போன்ற தடிப்பான தேவையான பொருட்கள் | எமது அயலவருடன் ஒற்றுமையாகவும், அன்புடனும் இருப்பதன் முக்கியத்துவம் பற்றி உரையாடுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது அயலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. எமது வைபவங்கள்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. வெசாக், தீபாவளி, நத்தார், ரம்ழான் முதலிய பண்டிகைகள் பற்றிய முக்கிய விடயங்களை அறிந்து கொள்கின்றனர்.
2. அக் காலங்களில் சுற்றுச் சூழலில் தென்படும் மாற்றங்களை இனங் காண்கின்றனர்.
3. பண்டிகை தொடர்பான ஒருமித்த வேலைகளில் ஈடுபடுகின்றனர்.
4. தான் வாழும் பிரதேசத்தில் நடைபெறும் பண்டிகைகள் சம்பந்தப்பட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.
5. பண்டிகைகள் வாயிலாக நற்குண நலன்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பண்டிகை பற்றிய முக்கியமான விடயங்களை இனங் காணுதல்.<br>- பண்டிகைகள் நடாத்துவதற்கான ஒழுங்குகள்.<br>- பண்டிகைகள் நடைபெறும காலம் (ஆண்டின் பௌர்ணமி நிலாவுள்ள போயா தினத்தில்.)<br>- புத்தபொருமானின் வாழ்க்கையில் ஒரு கட்டம். | புத்தரின் பிறப்பு, புத்தபாதம் அடைய பரிநிர்வாணம் போன்ற கட்டங்களைக் காட்டும் அட்டைகள், படங்கள், பண்டிகைக்கால வெசாக் வாழ்த்து மடல்கள் சமய புத்தகங்களிலுள்ள படங்கள், | சம்பந்தபட்ட படங்களை முன்வைத்து பிள்ளைகள் விடயங்களை எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய இலகுவான வசனங்களைப் பாவித்து உரையாடுங்கள். |
| பிள்ளைகளை பாடசாலையில் பண்டிகைகள் சம்பந்தமான கூட்டு முயற்சிகளில் ஈடுபட வைத்தல்.<br>- கொடி தயாரித்தல்.<br>- அலங்கரிப்புக்களைச் செய்தல்.<br>- சீலம் அனுஷ்டிப்பவர்களின் எளிமையான வெண்ணிற ஆடைகளின் விசேடத் தன்மையை அவதானித்தல். | -அட்டைகளைத் தயாரித்தல், காகிதம், நிறப் பென்சில்.<br>- சாயம், நிறக்கடதாசி முனையற்ற கத்திரி, மாப்பசை<br>- எளிமையான வெசாக் கூடுகளைத் தயாரிக்க மெழுகுதாள், காட்போட்.<br>- பிக்குகள், தசசீல தாய்மார்கள் அட்ட சீலம் அனுஷ்டித்தோரின் படங்கள். | குழுக்களாக அலங்கரிப்புக்களை தயாரிக்க வாய்ப்பு அளியுங்கள் இதன் மூலம் பொருட்களை பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| | - சித்திரம் வரைய பலகை, காகிதம், நிறப்பென்சில் | வாழ்த்து மடல்கள். போன்றவற்றை தனிதனியாகப் பூர்த்தி செய்ய சந்தர்ப்பம் அளியுங்கள். வழியில் அல்லது தென்படும் சீலம் அனுஷ்டித்தோரின் ஒழுக்கப் பண்புகள் மீது பிள்ளைகளின் அதிக கவனத்தை ஈர்க்க வையுங்கள். |
| பண்டிகைக் காலங்களில் சுற்றுச் சூழலிலுள்ள மாற்றங்களை அவதானிக்க வைத்தல் அவை பற்றி விளக்கம் அளித்தல். | - அலங்கரிப்புகள் தான மண்டபங்கள், வெசாக் விளக்கு தோரணை என்பனவற்றின் காட்சிப் படங்கள்.<br>- உண்மையான சந்தர்ப்பங்கள். | பிரதேசங்களுக்கு ஏற்ப இவை மாற்றம் அடையலாம். சுற்றாடலில் உள்ளவற்றை அவதானிக்க வைத்து, அவை பற்றி உரையாடுங்கள். முதியோர், இளையோர் ஒன்று சேர்ந்து குதுகலமடையவும் ஆசார சடங்குகளைப் பின்பற்றவும் வாய்ப்பளியுங்கள். |
| சுற்றுப் பிரதேசங்களை காணவும் அங்குள்ளவற்றைப் பார்க்கவும் பிள்ளைகளை அழைத்துச் செல்லல். (பண்சாலை, பெரஹர, தோரண என்பவற்றை பார்க்க) | உண்மையான சந்தர்ப்பங்கள் அல்லது சம்பந்தப்பட்ட மாதிரிகள் | கண்டவை பற்றி இலகுவாக உரையாட வாய்ப்பு அளியுங்கள். பிள்ளைகளின் அவதானத்தை செலுத்தக்கூடிய வழிபாடுகள் பற்றி உரையாடுங்கள். |
| பிள்ளைகள் பெரஹெர ஒன்றை ஏற்பாடு செய்ய வைப்பதன் மூலம் அவர்கள் கணக்கிடவும் முன்புறம், பின்புறம், நடுப்புறம் போன்ற சொற்களுக்கான விளக்கத்தை பெற்றுக் கொள்கின்றனர்.<br>நத்தார், தீபாவளி, ரமழான் முதலிய பண்டிகைகள் பற்றியும் இவ்வாறான செயற்பாடுகளை அளிக்கலாம். | -கொடி<br>-மலர்கள்<br>-மேளம், ஊதுகுழல் போன்ற மாற்றீட்டுப் பொருட்கள். | பெரஹெரவில் கொண்டு செல்லும் கொடிகளைக் கணக்கிடச் செய்யுங்கள்.<br>முன்புறம், பின்புறம், நடுப்புறம் செல்பவர்களைப் பற்றி உரையாடச் செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வைபவங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. மலர்கள்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. அயலிலுள்ள மலர்களை அவதானிக்கின்றனர். இனங் காண்கின்றனர்.
2. மலர்களிலுள்ள பலன்களைக் கற்றுக் கொள்கின்றனர்.
3. மலர்களைக் கொண்டு பல்வேறு விதமான அழகுணர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.
4. மலர்ச் செடிகளை நடுதல், பராமரித்தல் என்பன மூலம் அது பற்றிய அனுபவத்தைப் பெறுகின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பாடசாலை தோட்டத்தில், அதனைச் சுற்றியுள்ள மலர்களை வெவ்வேறாக அவதானித்தல் ,மலர்களை வெவ்வேறாக குறிப்பிடுதல். | தோட்டத்தில் நாற்று மேடை, மலர்ப்பாத்திரங்களில் உள்ள பல்வேறு மலர் வகைகள், மலர் மொட்டுக்கள்,மலர்ந்த மலர்கள், உதிர்ந்த மலர்கள். | சுற்று வட்டத்திலுள்ள பல்வேறுவகையான மலர்களை அவதானிப்பதற்கு உட்படுத்துங்கள். மலர்களின் சிறப்பியல்புகளை இனங் கண்டு அவற்றை பெயரிட வழி நடாத்துங்கள். |
| மலர் பூசை செய்தல், மலர் பாத்திரங்களை ஒழுங்குபடுத்தல்.<br><br>மலர் மாலைகள் செய்தல்.<br><br>மலர்களைக் கோர்த்தல். | - சிறு தட்டுக்கள்<br><br>- பல்வேறு வகையான இயற்கைப் பூக்கள்.<br><br>- மலர்ப் பாத்திரங்கள்<br><br>- ஈக்கில்கள் சில. | வகுப்பறையில் வைக்க மலர்பாத்திரமொன்றை தயாரிக்க வையுங்கள். சமய அனுஷ்டானங்களுக்காக மலர்களை ஒழுங்குபடுத்துங்கள், மலர் மாலைகளைத் தயாரிக்க உதவி செய்யுங்கள்.<br><br>ஈக்கில்களில் மலர்களைச் சொருகி வையுங்கள்.<br>உ-ம் :- அலரிப் பூக்கள் |
| மலர் இதழ்களை எடுத்து சித்திரங்களை தயாரித்தல, காகிதத்தில் மலரொன்றைக் கீறி அதனைச் சுற்றி வெட்டி ஒட்டுதல், மலர்களைப் பற்றிய பாடல்களை பாடுதல். | -வண்ண மலர் இதழ்கள், பசை, காகிதம், கத்திரி<br><br>-தொடர்புடைய படங்கள். | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| மலர்களைப் பற்றி கதையுங்கள்.<br><br>கதைகளைத் தயாரித்து கூறுதல்<br><br>நாற்றுமேடை ஒன்றில் வெற்று டின்களில், பொலிதீன் உறைகளில் மண்நிரப்பி மலர்களை வளர்த்தல். | -விரைவாக வளரும் மலர் விதைகள்.<br><br>உ-ம்<br>மலர் செண்டுகள், செவ்வரத்தி மலர் போன்றவை. வெற்று கலன்கள், பாத்திரங்கள், மண், நீர். | மலர் இதழ்களை ஒட்டி சித்திரமொன்றைத் தயாரிக்க உதவிபுரியுங்கள். மலர்களின் உருவ அமைப்பை நிறமிட்டு அதனைச் சுற்றிவர கத்தரித்து காகிதமொன்றில் ஒட்டுங்கள். மலர்கள் மீது விருப்பத்தை ஏற்படுத்த எளிமையான பாடல்களைப் பாடுங்கள். கதைகளை கூறுங்கள்.<br><br>டின்களில், பொலித்தீன் உறையில் மண் நிரப்பி மலர் செடிகளை நட பிள்ளைகளை ஆர்வங்கொள்ளச் செய்யுங்கள் |
| மலர்ச் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல். | - நீர்<br>- நீரை எடுக்க சிறுவாளி அல்லது டின் ஒன்று | தினமும் மலர்ச் செடிகளுக்கு தேவையான அளவு நீர் இடபழக்குங்கள். போதியளவு வெய்யில் உள்ள இடத்தில் செடியை வைக்கச் செய்யுங்கள். வீணாக மலர்களை பறிக்காதிருக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.<br><br>மலர்களுக்குச் சேதம் ஏற்படாதவாறு மலர்களைப் பறித்தல் மற்றும் மலர் மொட்டுக்கள், கிளை இலைகளுக்கு சேதம் விளைவிக்காதிருக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். |
| விரும்பியவாறு மலர்களைத் தெரிவு செய்தல், கணித்தல், மலர் வகைகளை நிறம் தரத்திற்கு ஏற்ப குவியல்களாகத் தெரிவு செய்தல். | - பல்வகையான, பல வடிவிலான மலர்கள். | மலர்களை குவியல்களாக தேர்வு செய்ய வையுங்கள்.<br>-நிறத்திற்கு ஏற்ப<br>-தரத்திற்கு ஏற்ப<br>-இதழ்கள் அதிகமானவை இதழ்கள் குறைவானவை என மலர்களைத் தெரிவு செய்ய வையுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்கள்

குளத்தில் மலரும் பூ
செந்தாமரை பூ

வாவியில் மலரும் பூ
நீலோற்பல பூ

ஆற்றில் மலரும் பூ
அல்லி கொக்கட்டிப் பூ

மரத்தில் மலரும் பூ
காட்டு மல்லிப் பூ

கொடியில் மலரும் பூ
வெண் மல்லிகைப் பூ

- ஆனந்த ராஜகருணா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. நீர்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. நீரைப் பெற்றுக் கொள்ளும் பல்வேறு இடங்களைப் பற்றி அறிந்து கொள்ளல்
2. நீரினால் எமக்குக் கிடைக்கும் பலன்களைப் பற்றி அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
3. சுற்றச் சூழலில் நீர் அசுத்தமடையும் விதம் பற்றி அறிந்து கொள்கின்றனர். நீரை அசுத்தப்படுத்துவதிலிருந்து தவிர்த்துக் கொள்கின்றனர்.
4. நீருடன் சம்பந்தப்பட்ட விளையாட்டுக்கள் மூலம் நீரின் சில தன்மைகளை இனங்கண்டு கொள்கின்றனர்.
5. குடிப்பதற்கு எடுக்கும் நீர் சுத்தமாக இருக்க வேண்டும் என அறிந்து கொள்கின்றனர்.
6. கொதித்து ஆறிய தண்ணீரைக் குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.
7. அசுத்த நீர் பாவனையிலிருந்து தவிர்த்துக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| நீரைப் பெற்றுக் கொள்ளும் இடங்களைக் காட்டும் படங்களைப் பார்த்தல்.<br><br>உ-ம் :- கிணறு, ஆறு, நீர்க்குழாய் | - நீரைப் பெற்றுக் கொள்ளும் இடங்களின் படங்கள்<br><br>- இயற்கையான நீர் நிலைகளின் மாதிரிகள். | நீரைப் பெற்றுக் கொள்ளும் இடங்கள். படங்களைப் பார்த்து குறிப்பிடுதல். விபரங்களுடன் உரையாடுதல்.<br><br>தொடர்புடைய வசனங்களைப் பார்த்து கலந்துரையாடுங்கள். உ-ம்:- கிணற்றிலிருந்து நீர் இறைத்தல், ஆற்றில் நீர் ஓடுதல், குழாயிலிருந்து நீர் வெளியேற்றல். |
| நீரிலிருந்து கிடைக்கும் பலன்கள் பற்றி உரையாடுதல். நீரிலிருந்து கிடைக்கும் பலன்களைக் காட்டும் படங்களை விபரித்தல்.<br><br>உ.ம் :- மலர்ச் செடிகளுக்கு நீர் ஊற்றுதல். | நீரினால் பெறப்படும் பலன்களை பிரதிபலித்துக் காட்டும் படங்கள்.<br><br>- குடிப்பதற்கு, குளிப்பதற்கு<br>- முகங்கழுவுவதற்கு<br>- துணி துவைக்க<br>- செடிகளுக்கு | நீரினால் கிடைக்கும் பலன்கள் பற்றிய பிள்ளைகளின் அனுபவங்களை கலந்துரையாடுங்கள்.<br><br>உ-ம்:-அசுத்தமான கைக்குட்டையொன்றை சவர்க்காரம் பூசி கழுவுதல |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| - கை கால்களைக் கழுவுதல்.<br><br>- கைக்குட்டையைக் கழுவுதல். | -மிருகங்களுக்கு<br><br>பாத்திரம், சவர்க்காரம், நீர். | செடிகளுக்கு நீர் ஊற்றுதல் (விரைவாக நீரை உறிஞ்சிக் கொள்ளும் செடிகளுக்கு) |
| நீர் அசுத்தமடையும் முறைகளை இனங் கண்டு கொள்ளல். சுற்றுப்புறத்தில் நீரைப் பயன்படுத்தும் இடமொன்றிற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லல். | சம்பந்தப்பட்ட படங்கள், சாக்கடைகள்/ வேறு நீர் நிலைகள் மற்றும் மூடப்படாத பாத்திரமொன்றில் இட்ட நீர் | அசுத்தமான நீருள்ள பாத்திரமொன்றிற்கு சவர்க்காரம்,வேறு அசுத்த எச்சங்கள், எண்ணெய் போன்ற பொருட்களை இட்டு நீர் அசுத்தமடையும் விதம் பற்றி அறிய வைத்தல். |
| நீரில் கரைபவை, கரையாதவை பற்றி தேடி அறிதல் | கிளாஸ் அல்லது பிளாஸ்ரிக் பாத்திரங்கள். - 3<br><br>சீனி, மண், உப்பு என்பன ஒரு தேக்கரண்டி வீதம்<br><br>- அகப்பை. | 3 கிளாஸ்களுக்கு ஒரே அளவானதாக நீரை எடுத்து ஒன்றில் சீனியும், அடுத்ததற்கு உப்பையும் மற்றையதில் மண்ணையும் இட்டு கலக்கவும். அப்பொருட்கள் கரைந்துள்ளவா இல்லையா? என்பதை அறிந்து கொள்ள வையுங்கள். |
| நீரில் அமிழ்கின்றவை, மிதக்கின்றவற்றைத் தேடிப் பார்க்க. பரிசோதனையை மேற்கொள்ளச் செய்தல். | - மரக் குற்றி துண்டுகள், சிறு கற்கள், போத்தல் மூடிகள், விதை வகைகள், காகித பஞ்சு.<br><br>- நீர் நிரம்பிய பாத்திரம் அல்லது வாளி. | தனித்தனியாக அல்லது குழுச் செயற்பாடுகளில் ஈடுபடவைத்து அவதானிப்பு மூலம் மூழ்குபவை, மிதப்பவை என்பவற்றை இனங்காண வாய்ப்பை ஏற்படுத்துங்கள். |
| கொதித்து ஆறிய நீரே குடிப்பதற்கு உகந்தது என்பதை அறிந்து கொள்ளல். | சம்பந்தப்பட்ட படங்கள் / மாதிரி நீர், அடுப்பு | நீரைக் கொதிக்க வைத்து ஆறவைக்க சுத்தமான பாத்திர மொன்றில் இடுங்கள். |
| குடிப்பதற்கு எடுக்கும் நீரை பாதுகாத்துக் கொள்ளப் பழக்குதல் | நீர் கொதிக்கும் படமொன்று. கொதிக்கவைத்த நீரை பாத்திரமொன்றில் மூடி வைத்தல் (யதார்த்தமாக) குடிக்க உகந்த நீர் சேகரிக்கப்பட்ட பாத்திர மொன்று,அதனை மூட ஒரு மூடி. | பாத்திரத்திலிருந்து நீரை எடுக்க தனியானதொரு கோப்பை ஒன்றை வைத்து பிள்ளைகளுக்கு சுத்தமான நீரைக் குடிக்கப் பழக்கப்படுத்துங்கள். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| | | நீர் சேகரிக்கப்படும் பாத்திரத்தை மூடி வைக்கப் பழக்கப்படுத்துங்கள். அவ்வாறு மூடி வைக்கப்படுவதால், ஈ,நுளம்பு, மற்றும் நாய், பூனைகள் போன்ற மிருகங்களிடமிருந்து பாதுகாக்கப்படுவது பற்றி கலந்துரையாடுங்கள். அசுத்த நீரை அருந்துவதால் நோய் ஏற்படுவதை விளக்குங்கள். |
| சுற்று வட்டத்திலுள்ள கால்வாய்கள், சாக்கடை என்பவற்றை சுத்தமாக வைத்திருக்க முனைதல், தோட்டத்தில் வெற்றுக் கலன்களில் நீர் தேங்குவதை தடுப்பதும், நீரை வீண் விரயம் செய்யாதிருக்கப்பழக்குதல். | இயற்கையான நீர் நிலைகள்.<br><br>மாதிரிகள்.<br><br>குழாயைத் திறந்து வைத்திருப்பதால் நீர் விரயமாகும் படங்கள். | நீரில் குப்பை கூளங்களைக் கொட்டுவதைத் தவிர்த்துக் கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்துங்கள்.<br><br>நீரை விரயமாக்காது பயன்படுத்த பிள்ளைகளைப் பழக்குங்கள். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. பாடசாலைச் சுற்றுப்புறத்தை சுத்தப்படுத்தல்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்


### பிள்ளைகள்

1. முன்பாடசாலையின் அறைகள், மண்டபங்கள், மலசலகூடம் முதலிய பல்வேறு இடங்களைச் சுத்தப்படுத்த உதவி செய்தல்.
2. வகுப்பறையை சுத்தப்படுத்த வேண்டும் என அறிந்து கொள்கின்றனர் அதனை சுத்தப்படுத்த உதவி செய்கின்றனர்.
3. வகுப்பிலுள்ள உபகரணங்கள், கதிரை, மேசை பல்வேறு விளையாட்டு பொருட்கள் ஆகியவற்றை கவனமாகப் பாவித்து உரிய இடத்தில் வைக்கும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.
4. பாடசாலைத் தோட்டத்தை துப்பரவாக மலர்ச் செடிகளை வளர்த்து மனோரம்மியமாக வைத்திருக்க உதவி செய்கின்றனர்.
5. செயற்பாடுகளின் பின்னர் எஞ்சும் அப்புறப்படுத்த வேண்டிய பொருட்களை கீழே போடாமல் குப்பை வாளி / குப்பைத் தொட்டியொன்றிற்குள் போடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.


| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| முன் பாடசாலைக்கு வரும் பிள்ளையுடன் பாடசாலையின் பல்வேறு இடங்களின் சுத்தத் தன்மை பற்றி கதைத்தல். | பாடசாலையில் அவதானிக்கக்கூடிய இடங்கள். | தினமும் காலையில் பிள்ளைகளின் உதவியுடன் விளையாட ஒதுக்கப் பட்டிருக்கும் இடங்கள், உபகரணங்களை வைக்கும் இடங்கள் முதலிய பாடசாலையிலுள்ள பல்வேறு இடங்களின் சுத்தம் மற்றும் ஒழுங்குமுறை பற்றி கதையுங்கள். |
| வகுப்பறையைத் துப்பரவு செய்ய வேண்டும் என அறிந்து கொண்டு அது பற்றி ஆசிரியையுடன் கதைத்து அதனைத் துப்பரவு செய்ய உதவி புரிதல். | - சிறு தும்புத்தடி<br>- குப்பைகளை இட பாத்திர மொன்று<br>- புடவைத்துண்டு கைத்துண்டு | வகுப்பறையைத் துப்பரவு செய்ய வேண்டுமெனக் கதைத்து அப் பணியில் பிள்ளைகளை குழுக்களாக ஈடுபடுத்துங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| வகுப்பிலுள்ள பல்வேறு/ உபகரணங்களை (அவை சுற்றாடலில் இருந்து பெறப்பட்டவை, விதைவகைகள், இலைகள் என்பன) கவனமாகப் பாவித்த பின்னர் உரிய இடங்களில் வைக்கப் பழக்குதல். | - சுற்றாடலிருந்து பெறப்பட்ட உபகரணங்கள்.<br>- விதை வகைகள்<br>- இலைகள்,இறகுகள் போன்றவை. | உபகரணப் பாவனை மற்றும் பாதுகாப்பாக வைத்தல் பற்றி ஆலோசனை வழங்குதல், உபகரணங்களை பாவனை செய்த பின்னர் உரிய முறையில் மீண்டும் வைக்கச் செய்யுங்கள். |
| பாடசாலைத் தோட்டத்தை துப்பரவாகவும் அழகாகவும் வைத்திருப்பது பற்றி பிள்ளைகளுடன் உரையாடுதல், பிள்ளைகள் கருத்து வெளியிடுதல், தோட்டத்தை துப்பரவாகவும் அழகாகவும் வைத்திருக்க பிள்ளைகளுக்கு உதவி செய்தல்.<br><br>அப்புறப்படுத்தும் பொருட்களை கீழே போடாது, தோட்டத்தில் ஏறியாது குப்பைத் தொட்டியில்/ பெட்டியொன்றில இடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல். | - சிறு வாளி<br>- நீர் ஊற்ற ஒரு பாத்திரம்<br>- நடுவதற்கு மலர்ச் செடிகள், விதைவகைகள்<br>- துப்பரவு செய்ய சிறு துடைப்பம்<br>- கீழே விழாது குப்பை வாளியொன்றினுள் குப்பை களை இடுவதை நிரூபனம் செய்யும் படமொன்று. | -பாடசாலை வளவைத் துப்பரவு செய்ய பிள்ளைகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.<br><br>சிறு கூடை ஒன்றில் குப்பைகளைக் கொண்டு சென்று குழியில்/வாளியில் போடுதல்.<br><br>சிறு விளக்குமாறினால் கூட்டுதல், குப்பைகளை ஓரிடத்தில் சேகரித்தல் போன்ற சிறு பொறுப்புக்களை ஒப்படையுங்கள்.<br><br>பாடசாலைத் தோட்டத்தில் நட வீட்டிலிருந்து விதைகள், செடி வகைகள், கிளைத் துண்டுகள் பலகை என்பவற்றை கொண்டு வரச்செய்து பிள்ளைகளின் உதவியுடன் அவற்றை நட்டு பராமரிக்கும் அறிவை அவர்களுக்கு வழங்குங்கள்.<br><br>செடிகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அவர்களுக்கு ஒப்படையுங்கள்.<br><br>பிள்ளைகள் காகிதம்/ புடவைத் துண்டுகளை வெட்டுதல், ஒட்டுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் அகற்றும் புடவை, காகிதத் துண்டுகளை ஒன்று சேர்த்து வகுப்பிலுள்ள குப்பைத் தொட்டியில் இடும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. எம்மைச் சுற்றியுள்ள மரங்கள்.

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. எம்மைச் சுற்றியுள்ள ஒரு சில மரம் வகைகளை இனங்கண்டு அவற்றின் பெயர் மற்றும் விபரங்களை அறிந்து கொள்கின்றனர்.
2. அவ் மரங்களின் இலை, மலர், காய். என்பனவற்றை இனங் கண்டு கொள்கின்றனர்.
3. விதைகளின் மூலம் செடி முளைவிடும் விதத்தை தானே விரைவாக விதைகளை (முளைவிடும்) நட்டு அவதானிக்கின்றனர்.
4. மரங்களினால் கிடைக்கும் பலன்களை அறிந்து கொள்கின்றனர்.
5. மரங்களை மதிக்கவும், அவற்றின் அழகினால் மகிழ்ச்சி அடையவும் அவற்றை அழிக்காது பாதுகாக்கவும் பழகிக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பாடசாலை மற்றும் காடுகளிலுள்ள மர வகைகளை (உ-ம் :- மா, தென்னை, பலா) இனங் கண்டு கொள்ளவும் அவைபற்றி உரையாடவும் பிள்ளைகளை திறந்த வெளிக்கு அழைத்து செல்லல். | வகுப்பறை வேலைகளுக்கு மரங்களிலிருந்து பெற்றுக் கொண்ட இலைகள் (மா,பலா, இலைகள் தென்னங்கீற்று)<br><br>மலர்கள், விதைகள், காய்களின் படங்கள் (ஓரே சித்திரத்தில் பல மரங்களை உள்ளடக்குவதாயின் பரிமாணத்தை கவனத்தில் கொள்ளுங்கள்). | பாடசாலை தோட்டத்தில் காணப்படுபவை பற்றி கலந்துரையாடுங்கள். (உ-ம்) எல்லா மரங்களினதும் உடம்புப் பகுதி சமனானவை அல்ல தென்னை மரத்தின் உடம்புபகுதி உயரமானது. மா மரத்தின் உடம்பு அகலமானது.<br><br>பெரிய,சிறிய மரங்களை வெவ்வேறாக பெயரிட வையுங்கள். |
| தோட்டத்தில் அவதானித்த மரங்களின் இலைகளைச் சேகரித்தல் (இளம், பழுத்த காய்ந்த இலைகள்) அவற்றை இனங்கண்டு பெயரிடுதல்.<br><br>அவ் இலைகளைக் காகிதத்தில் / புத்தக மொன்றில் ஒட்டுதல் | - கடதாசி, பசை<br>- காய், மா, தென்னை, பலா | இலைகளின் வடிவம், மென்மை கரடுமுரடான தன்மை பற்றி உரையாடுங்கள்.<br><br>உ-ம்-தென்னோலை, பலாஇலை, தளிர், இளம், காய்ந்த இலைகளை இனங் காணுதல்.<br><br>காய் வகைகளை வெட்டி அவற்றின் உள்ளே உள்ளவிதை முதலியவற்றைப் பற்றி கலந்துரையாட பிள்ளைகளை நெறிப்படுத்துங்கள். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| விதைகள் மூலம் மரங்கள் முளைப்பதை அவதானித்தல். | - மா, பலா விதைகள் ஜம்புக்காய் விதைகள்.<br>- நீர், மண்<br>- சில பாத்திரங்கள் (டப்பாக்கள்) | சட்டி பாத்திரங்களில் மண் நிரப்பி இவற்றை முளைக்கச் செய்யுங்கள்.<br>தினசரி சிறிது நீர் ஊற்றி அவை வேர் விட்டு வளரும் விதத்தை அவதானிக்கச் செய்யுங்கள். |
| தோட்டத்திலுள்ள மரங்களைப் பார்த்து உயர்ந்த, குட்டையான பெரிய, சிறிய மரங்களாக இனங் காணுதல். | மரங்களின் படங்கள் அம் மரங்களின் இலைகள் (படங்கள் அல்லது உண்மையான) | மரங்களின் உயரத்திற்கு ஏற்ப படங்களை ஒழுங்கு முறையாக வரிசையாக வைக்கச் செய்யுங்கள். |
| மரங்களிலிருந்து கிடைக்கும் பலன்களின் அடிப்படையில் கலந்துரையாடுதல்.<br>உணவு :-இலை, காய்<br>வீடு அமைத்தல் :- பலகை<br>கதிரை, மேசை :- பலகை<br>நிழல் :- மரங்கள், கிளைகள்<br>விறகு :- மரங்கள், கிளைகள்<br>பிள்ளைகளுக்கான பலன் :-<br>- பலா இலைத் தொப்பி<br>- குழல் | மரங்களிலிருந்து கிடைக்கும் பழங்கள் அல்லது பழங்களைக் காட்டும் படங்கள் மாங்கனி, விளாம்பழம் முதலியன.<br>- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தென்னை, பலா மரம் போன்ற பலன் பெறக்கூடிய மரமொன்றின் பாகங்கள் (உ-ம்) மட்டையுடனான தேங்காயின் ஓடு, ஈர்க்கு, தேங்காய் மட்டை, தென்னோலை முதலியன. | மரங்களிலிருந்து கிடைக்கும் பலன்கள் மற்றும் மரங்களினால் ஏற்படும் அலங்காரத்தை உண்மையான மரங்கள் அல்லது படங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுங்கள். |
| மலர்கள், பூத்துள்ள மரங்களின் தன்மைகள் காய்கள் உள்ள மரங்கள், கனிந்த மாம்பழங்கள் உள்ள மா மரங்களில் பழங்களை உண்ண வரும் பறவைகளைக் காணுதல்.<br>மரங்களில் காய்க்கும் பழங்களை பகிர்ந்து உண்ணப் பழகுதல்.<br>மரங்களின் பிஞ்சுக் காய்களை பறிப்பதிலும் இலைகிளை மற்றும் காய்கள் விழும் வண்ணம் கல் எரிதல் என்பவற்றை தவிர்த்தல்.<br>பாடசாலையில் கூட்டாக பழ மரங்களை நட்டு நீருற்றி அவற்றை சுற்றியுள்ள களைகளை அகற்றுதல். | கதைப் புத்தகங்கள்<br>படங்கள்<br>பழங்கள்<br>அன்னாசி<br>பப்பாசி போன்றவை | மரங்கள் மீது ஆசை மற்றும் மரங்களால் ஏற்படும் அழகை இயற்கையான மரங்கள் அல்லது படங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுங்கள்.<br>வகுப்பறைக்கு கொண்டு வந்த பழமொன்றை வெட்டி பிள்ளைகள் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைச் சுற்றியுள்ள மரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமரம்

சொல்லுங்கள் பாப்பா
செய்வது என்ன
மண்ணைக் கிண்டி
மாய்வதும் ஏனோ?

பாலா உனக்கு
புரிந்திடவில்லை
நாட்டிடப் போகிறேன்
நல்லொரு மாவிதை

பாடுகள் பட்டு
பழவிதை நாட்டி
உண்ணக் கிடைக்குமோ
ஒரு சிறு மாம்பழம்

பழத்தினை நான் எதிர்
பார்திடவில்லை
கடமை யொன்றே
கருத்திற் கொண்டேன்.

தனக்கே பயனில்லை
என்றால் உலகம்
என்ன பயன்பெறும்
இது புரியலையே

வியந்தேன் தம்பி
வார்த்தை கேட்டு
இப்படிப் போனால்
இனி உயர்வில்லை

முன்னோர் விதைத்த
மாமரங்களினால்
பின்னே நாமும்
பயன்பெற வில்லையா?

இனிவரும் சந்ததி
இன்பயன் பெற்றிட
அரும்பணி புரிவது
அதுவே எம்கடன்

கடமை எதுவென
கருத்தில் உணர்ந்தேன்
வணக்கம் பாட்டா
வருகிறேன் நன்றி.

-எஸ். மஹிந்ததேரர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. எம்மைச் சூழவுள்ள செடி வகைகள்.

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்


1. சூழவுள்ள பல்வேறு செடி வகைகளை இனங் கண்டு அவற்றின் பெயர் மற்றும் விபரங்கள் பற்றி உரையாடுகின்றனர்.
2. செடிகளின் பயன்களை அறிந்து கொள்கின்றனர்.
3. செடிகள் வளரும் விதத்தை அவதானிக்கின்றனர்.
4. செடிகளை பராமரிக்க பழகுகின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
| --- | --- | --- |
| பாடசாலை தோட்டத்தில் அதிகமாக உள்ள செடிகளை அவதானிக்க, இனங் காண மற்றும் அவை பற்றிய விபரங்களைக் கூற இயலுமாகுதல் (வேர், உடம்பு, தளிர், மலர் போன்றவை) | பாடசாலைத் தோட்டத்திலுள்ள பல்வேறு செடி வகைகள்.<br><br>உணவாகக் கொள்ளாத செடி வகைகள்.<br><br>வேறு செடி வகைகள் | செடிகளை இனங் கண்டு பெயர்களை குறிப்பிடவும், தோட்டத்தில் செடிகளை அவதானிக்கச் செய்யுங்கள், தோட்டத்திலிருந்து கொண்டு வந்த வித்தியாசமான செடிகள் இரண்டு அல்லது மூன்றை வகுப்பறையில் அவதானிக்கச் செய்யுங்கள். |
| பயனுள்ள செடிகள் சிலவற்றை வகுப்பறையில் காட்சிக்கு வைத்தல்.<br>அவற்றை இனங் காணுதல், செடிகளின் பல்வேறு பாகங்களை பயன் படுத்துவது பற்றி கற்றல் | வல்லாரை, பசளி, சின்ன வெய்காயப்பூ, கொசுவம் கிழங்கு, இஞ்சி, கற்றாளை முதலிய மருத்துவச் செடிகள் உண்மையான அல்லது படங்கள். | உணவாக அன்றாடம் பயன்படுத்தும் செடிகளின் பாகங்கள் மற்றும் மருந்தாகக் கொள்ளும் செடிகள் பற்றிய கலந்துரையாடலை வழிநடத்துங்கள். |
| செடி வகைகள் சிலவற்றை பயிரிடுதல்.<br><br>அவை வளரும் விதத்தை அவதானித்தல்.<br><br>(கிழங்கு, தண்டு என்பன மூலம்) | சில கடுகு விதைகள்<br>சில அவரை, பயறு விதைகள், சின்ன வெங்காயம், இஞ்சி துண்டொன்று.<br><br>யோகட் கோப்பை சிறிய வெற்று ரின், சிறு பொலித்தீன் உறை, மண், நீர். | யோகட் கோப்பையில் அல்லது வெற்று ரின்னில் கடுகு விதைகளையும், அவரை, பயறு, சின்ன வெங்காயம் போன்ற செடிகளை நாற்று மேடையொன்றில் அல்லது தேங்காய் மட்டை குவிய லொன்றில் அத்தோடு பாத்திரமொன்றில் இஞ்சித்துண்டை நடக் கூறுங்கள்.<br><br>விதைகளால், கிழங்கினால் செடிகள் வளரும் விதத்தை அவதானிக்கச் செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைச் சுற்றியுள்ள செடி கொடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| செடிகளைப் பராமரிக்க, பாதுகாக்கப் பழக்குதல். | நீரிட பாத்திரமொன்று, பசளை. | தினசரி பிள்ளைகளைக் கொண்டு செடிகளுக்கு நீர் ஊற்ற வையுங்கள். வெயில் விழும் வண்ணம் செடிகளை வைத்தல், பசளை இடுதல் என்பவற்றிற்கு வழி நடத்துங்கள். |
| அடிக்கடி உணவாகக் கொள்ளும் கீரை, இலைவகைகளை கண்டறிதல மற்றும் இனங் காணுதல். | பசளி, கங்கூன், வல்லாரை போன்ற கீரை வகைகள். (உண்மையாக) | கீரை, இலை வகைகளைத் தொட்டுப் பார்த்து அவற்றை இனங் கண்டு அளவு, வடிவம் என்பவற்றிற்கு ஏற்ப தெரிவு செய்ய வையுங்கள்.<br><br>கரடு முரடான, மிருதுவான தன்மைகளை இனங்காண வையுங்கள். |
| அவ் கீரை இலை வகைகளின் மாறுபட்ட வடிவம், அளவு தன்மைகளை இனங் காணுதல், இலை மரங்களின் படங்களை வரைதல். | உணவாகக் கொள்ளும் கீரை, இலை வகைகளும், படங்களும் ஒட்டுவதற்காக கடதாசி, பசை | வரைந்த படங்களைக் காட்சிக்கு வையுங்கள், அவற்றைப் பற்றி உரையாட பிள்ளைகளுக்கு இடமளியுங்கள், பல்வேறு செடி வகைகளுக்கு இடமளியுங்கள் பல்வேறு செடி வகைகளால் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் ஏற்படும் நன்மைகள் பற்றி கலந்துரையாடுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. எமக்கு உதவுபவர்கள்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. அன்றாட வாழ்வில் எமக்கு உதவி புரியும் சிலரை இனங் கண்டு கொள்கின்றனர்.
2. அவர்களிடமிருந்து கிடைக்கும் உதவி பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்கின்றனர்.
3. தெரிவு செய்து கொண்ட நபர்களை அபிநயம் செய்து களிப்படைகின்றனர்.
4. பல்வேறு தொழில்களில் ஈடுபடுபவர்களால் ஒருவருக்கு ஒருவர் உதவி கிடைக்கும் விதம் பற்றி புரிந்து கொண்டு அவ் அனைவருக்கும் ஒரே வகையான மதிப்பளிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.
5. அவர்களின் உதவி கிடைக்காவிட்டால் நாம் அனுபவிக்க வேண்டி ஏற்படும் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு அவர்களது சேவையை மதிக்கப் பழகிக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பாதை அருகாமைக்குச் சென்று எமக்கு உதவுபவர்களைக் காணுதல். | தெரிவு செய்து கொண்ட நபர்களை காட்டும் படங்கள்.<br><br>உ-ம் வாகனம் ஓட்டும் சாரதி, துவிச்சக்கர வண்டியில் செல்லும் தபால் பங்கீடு செய்பவர். | எமக்கு உதவும் நபர்களை அறிந்து கொள்ளச் செய்யுங்கள். அவர்களைப் பற்றி உரையாடுங்கள். அவர்களைப் பற்றிய தகவல்களைப் திரட்ட பிள்ளைகளை வழி நடத்துங்கள். |
| தெரிவு செய்த ஒவ்வொரு நபரினாலும் நிறைவேற்றப்படும் சேவை பற்றி உரையாடுதல் (ஒரு நாளைக்கு ஒருவர் வீதம்) | படங்களிலுள்ள நபர்களின் கடமைப் பின்னணி.<br><br>உ-ம் தபால் பங்கீடு செய்பவர் தபால் நிலையத்திற்கு அண்மையில், சாரதி வாகனத்திற்கு அருகே. | தபால் நிலையமொன்றிற்கு சந்தை ஒன்றிற்கு அழைத்து சென்று அங்கு அந் நபர்களால் ஆற்றப்படும் அச் சேவைகளைக் காண இடமளியுங்கள். ஒவ்வொரு நபரிடமிருந்தும் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கதைக்க வையுங்கள்.<br><br>அந் நபர்களின் படங்களைச் சேகரிக்க ஊக்கம் அளியுங்கள். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| தெரிவு செய்து கொண்ட நபர்களை கண்ட பின்னர் அவர்களைப் பின்பற்றல்.<br><br>உ-ம் : வியாபாரியைப் பின்பற்றும் பொழுது வியாபாரம் செய்வோர், பொருட்களை வாங்குவோர் உள்ளடங்க வேண்டும். அவர்களது நடவடிக்கைகள் களைப்பானவை, பாரந் தூக்குதல்.<br><br>அபிநயம் செய்து காட்டும் பொழுது ஒழுக்கமான முறையில் உரையாடுதல், ஒவ்வொரு தொழிலும் உதவியானதால் அனைவரையும் சமமாக மதித்தல். | பின்பற்றும் நபருக்கு தேவையான உபகரணங்கள்.<br>உ-ம் :- தபால் பங்கீடு செய்பவர், முத்திரை இட்ட பழைய கடித உறைகள், மாற்றீட்டு பொருட்கள், கடிதங்களை வைத்துக்கொள்ள தட்டையான பெட்டி ஒன்று என்பன. | அபிநயத்துப் பாடும் பொழுது தெரிவு செய்யப்பட்ட நபருடன் தொடர்புடையவர்களையும் உள்ளடங்கும் விதத்தில் பிள்ளைகள் குழுவாக தெரிவு செய்து செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.<br><br>ஒழுக்கமாகவும், அன்பாகவும் கதைக்க வையுங்கள், எடுத்துக் காட்டாக, பிள்ளைகளுடனும் ஒழுக்கமாகக் கதையுங்கள். |
| அன்றாடம் எமக்கு உதவுபவர்கள் வராமற் போன நாளொன்றில் ஏற்படும் நிலைமை பற்றி கலந்துரையாடல். | படங்களும் உண்மையான சந்தர்ப்பங்களும்.<br><br>உ-ம்:- பாதை இரு மருங்குகளிலும் உள்ள குப்பைகள்.<br><br>சாரதிகள் இல்லாத பஸ் வரிசையொன்று | தபாற்காரர் சாரதி, குப்பை அகற்றுபவர் வராது விட்டால் எமக்கு ஏற்படும் இடர்களைப் பற்றி கதைப்பதன் மூலம் அந்தச் சேவைகளின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுங்கள். |

மேற் குறிப்பிட்டவாறு மேலும் எமக்கு உதவுவோர் பற்றி பிள்ளைகள் கண்டுகொள்ள, அறிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு

மல்லிகைகள் பூத்திடுமோர்
புல்வெளி ஆகாயமோ
சொல்லிட வார்த்தையிலாத
சுந்தரம் இதுவாகுமோ

ஆழ்ந்துறங்கும் பறவையினம்
ஆந்தைகளோ பறந்திடும்
அரசமரக் கிளைகளிலே
வெளவால் ஒலி எழுப்பிடும்

அக்காவின் மாலையிலே
அமைந்துள்ள முத்துக்கள்போல்
சொரிந்திடும் பனித்துளிகளால்
செய்வோம் அதுபோலவே

பூரணையும் எமைப் பார்த்து
பூப்போல சிரிக்குது
தென்றலும் பூக்கரங்களால்
தடவுது இவ்வேளையில்

தாரகை வானில் மலர
தரையினில் வெண்பூ மலர
மங்கள வீடாய் இரண்டும்
மின்னும் அழகு அற்புதம்.

எஸ். மஹிந்த தேரர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. கனிகள்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. அண்மிய சுற்றாடலிலுள்ள மரங்களிலிருந்து கிடைக்கும் பழங்களை இனங்கண்டு கொள்கின்றனர்.
2. வீட்டில் உணவாகக் கொள்ளும் அவ்வாறே கடைகளில் விற்பனைக்குள்ள பழங்களைக் இனங்கண்டு கொள்கின்றனர். பெயர் குறிப்பிடுகின்றனர்.
3. பழங்களை உணவாகக் கொள்ள வேண்டும் என அறிந்து கொள்கின்றனர்.
4. பலவகை பழங்களையும் இனங்கண்டு கொள்கின்றனர். பழங்களை உட்கொள்ளும் முன் அவற்றை கழுவிக் கொள்ளும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.
5. பழங்களைப் பற்றிப் பாட, கேட்டு, வரைய பழகிக் கொள்கின்றனர்.
6. பழங்களை மரத்திலிருந்து பறிக்கும் பொழுது இளங் காய்கள், இலை மற்றும் கிளைப் பாகங்களைப் பறித்துப் போகும் பழக்கத்திலிருந்து தவிர்த்துக் கொள்வதுடன் விரைவாக வளரும் பழ வகைகளை நடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பாடசாலைத் தோட்டத்திற்கு அண்மிய பகுதியொன்றிற்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று பழங்கள், மரம்/ செடிகொடிகளை அவதானித்தல்.<br><br>(உ -ம்) :- கொய்யாப்பழம், மாம்பழம், ஜம்புக்காய், மர முந்திரிகை, அண்ணாசி, பப்பாசி, ரம்புட்டான். | ஜம்புக்காய். மாம்பழம், தோடம்பழம், நாரங்காய், மர முந்திரிகை போன்ற பழவகைகள். | தோட்டத்தில்/ சுற்றுப்புறங்களிலுள்ள மரங்களின் பழங்களை அறிந்து கொள்ளச் செய்யுங்கள.<br><br>பழ வகைகளை வகுப்பிற்கு கொண்டு வரச் செய்து அவற்றை பிள்ளைகளின் கையில் கொடுத்து அவற்றை இனங்காண வையுங்கள். அப்பழங்களை கழுவி சலாத் ஒன்றை செய்து ருசி பாருங்கள் |
| சந்தையிலிருந்து பெறப்பட்ட பழங்களை வெவ்வேறாக இனங் கண்டு பெயரிட வையுங்கள். | பல்வேறு பழ வகைகள் (தமது பகுதியிலிருந்து அல்லது வேறு நாடுகளிலிருந்து, சந்தையி லிருந்து பெறப்பட்டவை. | சந்தையொன்றிற்கு / கடையொன்றிற்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று அவர்கள் அவற்றை அவதானிக்கச் செய்யுங்கள் (பழங்கள் ஒன்றோடொன்று வேறுபடும் விதம், நிறம் வடிவம், தோலால் வேறுபடும் விதம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பழங்களின் வடிவம், நிறம், தன்மைகளை இனங் காணுதல். | தோடம்பழம், அண்ணாசிப்பழம், மாம்பழம், வாழைப்பழம், நெல்லி, பப்பாசி என்பவற்றின் படங்கள். | பழங்களைக் கையில் எடுத்து அவற்றின் தன்மைகளை இனங் காண பழங்கள் / படங்கள் என்பவற்றைத் தெரிவு செய்ய வையுங்கள். |
| பழங்களின் பல்வேறு சுவைகள் மற்றும் அவற்றிலிருந்து வீசும் மனங்களை இனங் காணுதல். | தோடம்பழம் / நாரங்காய், மாம்பழம், பப்பாசி / நெல்லி, விரலி. | பல்வேறு சுவைகள் புளிப்புச் சுவை, இனிப்புச் சுவை மற்றும் கசப்புச் சுவை கொண்ட பழங்களை பாடசாலைக்கு கொண்டு வந்து ஒப்பிட்டுப் பார்க்க பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள் மாங்கனி தோடம்பழம் போன்றவற்றின் சுவையினை இனங்காண இடமளியுங்கள்.<br>பலவகை பழங்களை வெட்டி உள்ளே உள்ள வித்தியாசத்தை காண வையுங்கள்.<br>(உ -ம்) :- தோடம்பழம், மாம் பழம், பப்பாசி. |
| தினசரி பழங்களை உட்கொள்ள வேண்டுமென கலந்துரையாடுதல். (சிற்றூண்டியாக அல்லது மேலதிகமாக) | பழங்களின் படங்கள், லேபல், பழங்கள், பச்சை /காய்ந்த முந்திரிகை | பல்வேறு முறையில் உணவாகக் கொள்ளும் பழங்கள் பற்றி கலந்துரையாடுங்கள். |
| பழங்களை வைத்திருந்து உணவாகக் கொள்ள முடியுமெனக் காட்டுதல். | (நீண்ட பாவனைக்கு ரின்களில் அடைத்து வைத்தல்)<br>ஜாம் போன்ற உணவுகளைத் தயாரித்தல். | பிள்ளைகளின் அனுபவங்கள் பற்றி கதைப்பதற்கு இடமளியுங்கள் கலந்துரையாடலுக்கு படங்களையும் பயன்படுத்துங்கள். |
| பழங்களைப் பற்றிப் பாட்டு பாடுதல், பழங்களின் மாதிரி உருவங்களைத் தயாரித்தல், பழவகைகளின் படங்களை ஒன்று சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தல். | பழங்களின் படங்கள்<br>ஒட்டுவதற்கான புத்தகம் / காகிதம்.<br>வனைவதற்காக களிமண், மாக் கலவை<br>ஒட்டுவதற்கு சிரட்டை, காகிதத் துண்டுகள்.<br>வரைய கற்பலகை, புத்தகம் | பழங்களை வரைய பல்வேறு வகையான பழங்களைத் தயாரிக்க மற்றும் பழங்களைப் பற்றி பாட்டுப்பாட பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் அளித்து வழிகாட்டுதலொன்றை வழங்குங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. மிருகங்கள்.

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### உதாரணம் - பசு

### பிள்ளைகள்

1. பசுவின்/ கன்றின் உருவ அமைப்பை அறிந்துகொள்ள முனைகின்றனர்.
2. பசுவின் உணவு பற்றி அறிந்து கொள்கின்றனர்.
3. பசுவினால்/ மாட்டினால் கிடைக்கும் பயன்களை அறிந்த கொள்கின்றனர்.
4. பசு/மாடு/கன்று என்பவற்றின் மீது அன்பை ஏற்படுத்தும் பாடல்களில் ஈடுபடுகின்றனர்.
5. பசு/கன்று என்பவற்றை வரைந்து அவை பற்றி கதைக்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| சுற்றுச்சூழலிலுள்ள பசு, கன்று என்பவற்றை அவதானித்தல் (இருக்குமிடம், எழுப்பும் ஓசை நிறம்) | உண்மையான பசுவொன்று, கன்றுக் குட்டியொன்று. படங்கள். | சுற்றுப்புறத்திலுள்ள பசுவொன்றையும் கன்று ஒன்றையும் அவதானிக்க வழி நடத்துங்கள். அவை பற்றி உரையாடுங்கள். |
| பசு/ மாடு உட்கொள்ளும் உணவுகள் யாவை எனப் பார்த்தல் (படங்கள் மூலம் அல்லது உண்மையாக) | உண்மையான கால்நடைகளின் உணவு வைக்கோல், புண்ணாக்கு, புல், நீர்.<br><br>மாடுகள், புல்,வைக்கோல், உட்கொள்ளும் படங்கள். | உண்மையான சந்தர்ப்பங்களை பிள்ளைகள் அவதானிக்க வழி நடத்தல்.<br><br>வண்டி இழுக்கும் மாடுகள், படங்கள் வாயிலாக உரையாட பிள்ளைகளை பங்கு கொள்ளச் செய்யுங்கள் சாணி எருவை பாத்தியில் இடவையுங்கள். |
| உண்மையான மிருகங்களுக்கு அருந்த நீர் வழங்குதல், மிருகங்கள் மீது அன்பை ஏற்படுத்தும் கதைகளைக் கூறுதல், பாட்டுப்பாடுதல். | சம்பந்தப்பட்ட படங்கள், நீர் வழங்கும் வாளி. | மாடுகள் / பசுக்கள் மீது அன்பு இரக்கம் ஏற்படுத்தும் கதைகளைக் கூறி பிள்ளை களுடன் அது சம்பந்தமான பாடல்களை பாடுங்கள். |
| பசு/கன்று/ மாட்டின் படங்களுக்கு நிறம் பூசுதல், வடிவத்தை வெட்டி தாளில் ஒட்டுதல் அதைப் பற்றி கதைத்தல். | பசு/கன்று/மாட்டின் படங்கள், வரையக் கடதாசி, நிறபென்சில், கத்தரி. | மிருகங்களின் உருவங்களைக் கீறி நிறமிட்டு வடிவத்தை வெட்டுவதற்கு வழி நடத்துதல. அப்படங்களை ஒட்டக் கொடுங்கள், மிருகங்களின் பெறுமதி பற்றி உரையாடுங்கள், அவைகளுக்கு கொடுமை செய்யாமல் அன்பு செலுத்தவையுங்கள். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| பசு எமக்கு பால் தருவதால் அதிகம் அன்பு வைக்க வேண்டும் எனக் கூறுகின்றனர் / புரிந்து கொள்கின்றனர். | படங்கள்<br>பால்போத்தல்<br>பட்டர்<br>சாணி எரு | பசுவினால் கிடைக்கும் பயன்களை ஞாபகமூட்டுங்கள் சாணி எரு செயற்கை பசளையை விட நல்லது என ஞாபக மூட்டுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயலின் கதை

முயல் ஒன்று தாவி
காட்டு வழி மேவி
கண்டது ஒரு வாவி
தின்றது புல் நீவி
பின்பு முயல் தேவி
நீர் குடித்தே ஆவி
மீண்டது பின் தாவி
போதுமெனக் கூவி

பின்பு தலை சீவி
பூக்களையும் தூவி
நர்த்தனமாய்த் தாவி
பாடலொன்றைக் கூவி

ஆட்டமெலாம் மீறி
அதன் பின் களைப்பாறி
போதுமெனக் கூறி
நின்றது முயல் தேறி
குமுறல் ஒன்று சீறி
வந்தது அதை மீறி
துடித்தது பயம் ஊறி
நின்றது மனம் மாறி

இடி ஒலியும் ஏறி
நெருங்க விடை கோரி
கால்கள் வைத்து ஏறி
பார்த்தது பயம் மீறி

செடி கொடியை மூடி
தெரிந்தது மின ஓடி
இலை குழை தள்ளாடி
அசைய ஒலி கூடி
ஓய்ந்தது பின்னாடி
உருண்டது உறவாடி
கண்கள் சற்று மூடி
மறைந்தது பின் ஓடி.

\- முனிதாச குமாரதுங்க -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. எம்மைச் சுற்றியுள்ள மண் வகைகள்.

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. அண்மித்த சூழலிலுள்ள மண்வகைகள் சிலவற்றை இனங்கண்டு பெயரிடுகின்றனர்.
2. மண்ணைக் கையிலெடுத்து விசேட தன்மைகளை இனங் காண்கின்றனர்.
3. சுற்றுப் புறத்தில் அதிகமாகக் காணப்படும் மண்வகைகளில் செடி கொடிகள் வளரப் பொருத்தமான மண்ணை அனுபவ வாயிலாகக் கண்டு கொள்கின்றனர்.
4. மண், களிமண். என்பவற்றால் கிடைக்கும் பயன்களை இனங் கண்டு கொள்கின்றனர்.
5. குப்பை குழியொன்றை அமைத்தல் மற்றும் அவற்றிலிருந்து எடுக்கும் பசளையை செடி கொடிகளுக்கு இடும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| குறுமண், கறுப்புமண் என்பவற்றை இனங்காண்பதற்கு பெயர் குறிப்பிடுவதற்கு ஏற்றவாறு பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப் பட்ட மண்வகைகளை பரிசீலனை செய்யுங்கள், உரையாடுங்கள். | பாத்திரங்களில் அல்லது பைகளில் இட்டு வகுப்பறையில் அவதானிக்கக் கூடியவாறு வைக்கப்பட்ட மண் வகைகள்.மணல், குறுமண், கறுப்பு மண். | அண்மையில் அமைந்துள்ள மண்வகைகளை பார்க்க பிள்ளைகளை அழைத்துச் செல்லுங்கள் மண் வகைகளை இனங்கண்டு பெயர் குறிப்பிட சந்தர்ப்பம் அளியுங்கள். |
| மண்வகைகளைத் தொட்டுப் பார்த்து அவற்றின் தன்மைகளை இனங்காணுதல், அவைபற்றி உரையாடுதல். | மண்வகைகளான கரடு முரடான, மென்மையான, மற்றும் குறுமண் வகைகள் சிறிதளவு வீதம். | மண்வகைகளை தொட்டுப் பார்த்து அவற்றின் தன்மையை இனங்காண்பதற்காக அவதானிப்பிற்கு உட்படுத்துங்கள். |
| செடிகொடிகள் செழித்து வளரும் கலை வகைகள் பற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல். | சில பாத்திரங்களை மணல்மண், களிமண் என்பவற்றால் நிரப்பி அவரை போன்ற விதைகளை நடுதல். | மணல் மட்டும் நிரப்பிய பாத்திரங்களில் களிமண்ணை மட்டும் நிரப்பிய பாத்திரங்களில் நடப்பட்ட செடிகளை அவதானிப்பிற்கு உட்படுத்துங்கள். அச்செடிகளில் மிக நன்கு வளரும் செடிகளை அவதானித்தல். அவர்களது அவதானிப்புப்படி செடிகளுக்கு உகந்த மண் பற்றி முடிவு செய்ய உதவி புரியுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைச் சுற்றியுள்ள மண் வகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| செடிகள் வளர்வதற்கு மேலதிகமாக மண்ணால், களி மண்ணினால் கிடைக்கும் பயன்களை காணுதல். தயாரிக்கப்படும் பொருட்களை சுட்டிக் காட்டுதல். | மட்பாண்டம், சட்டி, மலர் பாத்திரங்கள், ஓடு, செங்கட்டி, களி மண்ணினால் கட்டப்பட்ட வீடுகளின் படங்கள். | களி மண்ணினால் தயாரிக் கப்படும் பொருட்கள் பற்றி கண்டறிய உதவி புரியுங்கள். அவற்றினால் வீடு வாசல்களில் பெறப்படும் பயன்கள் பற்றி உரையாடுங்கள். |
| மண்ணைப் பாதுகாக்க உதவும் பழக்கத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.<br><br>மண்ணரிப்பு ஏற்படாமல் தடுக்க பாத்திகளைச் சுற்றி கற்சுவர் போடுதல், அகழி வெட்டுதல் என்பன உதவுவதாக புரிந்து கொள்ளவைத்தல். | பசளை தயாரிப்பது பற்றிய உண்மையான சந்தர்ப்பங்களைக் காட்டும் படங்கள். | இலைப்பசளை, சாணிப் பசளை இடுவதால் மண் செழிப்படைவதாக அனுபவம் மூலம் அறிந்து கொள்ளச் செய்யுங்கள். பாத்தியைச் சுற்றி மண் கழுவிச் செல்வதை தடுக்க காண் வெட்டுதல் போன்றவற்றை பயன்படுத்தும் முறைபற்றி பாடசாலைத் தோட்டத்தில் செயல் முறையாக அறிமுகப்படுத்த ஆர்வம் கொள்ளுங்கள். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. எமது விளையாட்டுக்களும் சம்பிரதாயங்களும்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. பெருநாள், பண்டிகைகள் மற்றும் விளையாட்டுக்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்கின்றனர்.
2. பண்டிகைகள் மற்றும் விளையாட்டுக்கள் தொடர்பான பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர்.
3. தனது வீட்டில் அல்லது தான் பங்குபற்றி பாடசாலையில் நடக்கும் செயற்பாடுகள் வாயிலாக நற்பழக்கங்களை வளர்த்துக் கொள்கின்றனர்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலத்தில் அவ் விளையாட்டுக்கள் பற்றிய தகவல்களை கலந்துரையாடுதல், பண்டிகை காலத்தில் பாடசாலை விடுமுறைக் காலத்தில் வீடு வாசல்களை சுத்தப்படுத்தல் போன்றவை மூலம் பண்டிகைக்கு தயாராகுதல் என்பவற்றிக்கு கவனத்தை செலுத்தச் செய்தல். | தேசிய விளையாட்டுக்கள் பற்றிய படங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படும் அறிவித்தல்கள், புகைப்படங்கள. | பண்டிகைகளுடன் தொடர்புபட்டுள்ள வழக்கங்கள். முள் முருங்கைப் பூக்கள் பூக்கும், காலம், குயிலோசை கேட்கும்காலம், மரமுந்திரிகை, மாம்பழம் போன்ற பழங்கள் உள்ள காலம் எனக்குறிக்கும் பாடல்கள், கீதங்களை அறிமுகப்படுத்துங்கள் |
| வைபவங்கள் தொடர்பான பல்வேறு அம்சங்கள், தீன் பண்டங்கள் தயாரித்தல், புது ஆடைகள் அணிதல், அடுப்புக் கூட்டுதல், சுபநேரத்தில் உணவு உட்கொள்ளல் உறவினர் வீடு செல்லல், மூத்தவர்களுக்கு மரியாதை செய்தல், வானவெடி பற்றவைத்தல் என்பன பற்றி பிள்ளைகள் உரையாடுகின்றனர். | படங்கள் மாதிரிகள், உணவு மேசை மற்றும் தீன் பண்டங்கள். (களி மண்ணால் தயாரித்தல்) | பிள்ளைகளுக்கு செய்திகளைக் கூற கேள்வி கேட்க சந்தர்ப்பம் அளியுங்கள். கதைகள் வாயிலாக விடயங்களை விளக்குங்கள். தமது அனுபவங்களை வெளிப்படுத்த வாய்ப்பளியுங்கள். பிள்ளைகள் பெற்றோர் ஏனையோர் தமது மூத்தவர்களுக்கு வெற்றிலை வழங்குதல், மரியாதை செய்தல் என்பன பாதுகாக்கப்பட வேண்டிய வழக்கங்கள் என மேம்படுத்திக் காட்டுங்கள். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள்/ உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| தனது பிரதேசத்தில் நடைபெறும் பெருநாள், பண்டிகையின்போது சுதேசிய விளையாட்டுப் போட்டிகளை கண்டுகளிக்க (கயிறு இழுத்தல், ஊஞ்சல் ஆடுதல் முதலிய) பாடசாலையில் ஏற்பாடு செய்யப்படுவதால் பண்டிகை மூலம் பிள்ளைகள் அனுபவம் பெறுகின்றனர். | பண்டிகை நிகழ்ச்சியொன்றை காண்பதற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல் அல்லது பெற்றோருக்கு அப்பொறுப்பை ஒப்படைத்தல். பண்டிகை நிகழ்ச்சியோடு தொடர்புடைய உபகரணங்கள், உணவு வகைகள், ரபான், உடைகள். | பண்டிகைக்குத் தயாராகுதல், தேவையான உபகரணங்களை தயார்படுத்தல், ஆடல் பாடல்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவதன் மூலம் பிள்ளைகளுக்கு அப்பண்டிகை பற்றிய அனுபவத்தை பெற்றுக் கொள்ள உதவுங்கள். ரபான் அடிகள், கதைகளை முன்வையுங்கள். |
| தீன் பண்டங்களின் வடிவம் சுவை என்பவற்றை இனங்கண்டு கொள்கின்றனர். | பலகாரம், கொக்கிஸ், அல்வா, தொதல் | அல்வா, டொபி என்பன நாற்சதுரமானவை என இனங்காணுதல். |
| பண்டிகைகளுடன் சம்பந்தப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு பழக்குதல், தயாராக்குதல் (வீடு பொருள்களை துப்பரவு செய்தல்)<br><br>ஒற்றுமை, பெற்றோர், மூத்தவர்களை மதித்தல், மரியாதை செய்தல் என்பன மூலம் மனதிலுள்ள கோபதாபங்களை மறந்து ஒற்றுமைப்படுதல் (அயலாருக்கு உணவு, பரிசுகளை வழங்குதல்). | படங்கள், பாடசாலையில் ஏற்பாடு செய்யும் பண்டிகை நிகழ்ச்சிகள். | பிள்ளைகளுக்கு பாடசாலைத் தோட்டம் என்பவற்றை சுத்தம் செய்ய பங்கு கொள்ள வாய்ப்பு அளியுங்கள். குழுக்களாக இக்காரியங்களில் ஈடுபட இடமளியுங்கள். மூத்தவர்களுக்கு, பெற்றோருக்கு, ஆசிரியர்களுக்கு இப்பண்டிகை காலத்தில் கௌரவிக்க பிள்ளைகளை முனையச் செய்யுங்கள். விடுமுறையின் பின்னர் பாடசாலைக்கு சமூகம் அளிக்கும் போது அதுபற்றி கலந்துரையாடுங்கள். உணவுகளை பகிர்ந்து சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்தி சாப்பிட்ட பின்னர் அவ்விடத்தை சுத்தஞ்செய்ய வழி நடத்துங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விளையாட்டுகளும் பழக்க வழக்கங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடலில் உள்ள செல்வங்கள் அனைவருக்குமே

பார் அதோ மரம்
நல்ல தோடைகள்
பழுத்து கனிந்து
நிறைந்த கிளைகள்
குனிந்து வளையுதே

எனக்கும் தங்கைக்கும்
இரண்டு போதுமே
அதிகம் பறிக்கும்
கொடிய குணம்
இல்லை எம்மிடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. எமது வீட்டையும் சுற்றுப் புறத்தையும் சுத்தஞ் செய்தல்

## எதிர்பார்க்கும் கற்றல் பலன்கள்

### பிள்ளைகள்

1. வீட்டிலுள்ளவர்கள், வீட்டையும் வீட்டுத் தோட்டத்தையும் சுத்தம் செய்வதை குப்பை கூளங்களை அப்புறபடுத்துவதை அவதானிப்பிற்கு உட்படுத்துங்கள்.
2. வீட்டுத் தோட்டத்தில் மலர்ச்செடிகள் மட்டுமன்றி காய்கறி வகைகள் பயிரிடவும் ஆர்வம் கொள்கின்றனர்.
3. வீட்டை அலங்காரமாகவும் அழகான தோற்றத்துடனும் வைத்திருக்க ஒழுங்குமுறையும் சுத்தமும் அத்தியாவசியம் என்பதை உணர்ந்து கொள்கின்றனர்.
4. வீட்டில் தினசரி பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பழக்கங்களுக்கு பழகிக் கொள்கின்றனர்.
5. வீட்டில் நடைபெறும் பல்வேறு நடவடிக்கைகளை பின்பற்றி முறையாக அபிநயத்தல், பாடுதல் மற்றும் உரையாடல்களில் ஈடுபடுத்தல்.

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| வீட்டில் உள்ளவர்கள் வீட்டை சுத்தஞ் செய்யும் விதம் குப்பை கூளங்கள் அப்புறப்படுத்தும் விதம் பற்றி அவதானித்தல், சுத்தஞ் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடும் விதம் பற்றி உரையாடுகின்றனர். | | காலையிலேயே வீட்டைக் கூட்டி சுத்தம் செய்தல், வழமையாக தோட்டத்தை சுத்தஞ் செய்தல், குப்பைகூளங்களை அப்புறப்படுத்தும் விதம் என்பனவற்றை அவதானிக்க வைத்து அதுபற்றி உரையாடுங்கள். (பிள்ளைகளுக்கு இடையே பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே) தோட்டத்தை துப்பரவாக வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது வீட்

சுத்தமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ும் சுற்றுப் புறத்தையும்
ந்திருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுவர் செயற்பாடுகள் | உபகரணங்கள் / உதாரணங்கள் | வழிநடத்தல் / நடவடிக்கைகள். |
|---|---|---|
| வீட்டுப் பொருட்களை ஒழுங்கு படுத்துவது பற்றிப் பெறும் அனுபவத்திற்கு ஏற்ப வீடுகளின் சாமான்களை ஒழுங்காக வைத்தல், வீட்டை அழகாக வைத்திருக்க மலர் பாத்திரங்களால் அலங்கரித்து வைத்தல். | வேடிக்கை வீடொன்று சில மாற்றீட்டு பொருட்கள் சிறு துடைப்பம் விளக்குமாறு, பாதத் துடைப்பம், மலர் பாத்திரமொன்று. | பொருட்களை ஒழுங்காக வைத்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்த உதவி செய்யும்படி கலந்துரையாடல்களில் ஈடுபடுங்கள், மலர் பாத்திரங்களை தயாரித்து வீட்டிற்கு கொண்டு செல்ல அல்லது அவற்றை வகுப்பறையில் வைத்திருக்க உதவி செய்யுங்கள். |
| வீட்டிலுள்ளவர்கள் வீட்டுத் தோட்டத்தில் மலர்ச் செடிகள், காய்கறிவகைகளை பயிரிடும் பொழுது அக்காரியங்களில் பங்கு பற்ற பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டுதல். | வீட்டுப்பயிர்கள், சம்பந்தப்பட்ட வீட்டுத்தோட்டத்தின் படமொன்று. உண்மையான சந்தர்ப்பங்கள். நன்கு பயிரிடப்பட்டுள்ள சுத்தமாக வைத்திருக்கும் வீட்டுத்தோட்டம் ஒன்றையும் அசுத்தமான தோட்டமொன்றையும் காட்டும் படங்கள். | பிள்ளைகளை பாடசாலையில் பயிரிடும் நடவடிக்கைகளில பங்குகொள்ளச் செய்யுங்கள். |
| வீட்டில் செய்யும் பல்வேறு வேலைகள் கூட்டுதல், உணவு தயாரித்தல், துணிதுவைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை உருவாகித்துக் காட்டும் முறையான அபிநயங்களில் ஈடுபட வைத்தல். | தேவைப்படும் மாற்றீட்டுப் பொருட்கள்.<br><br>தேங்காய்ச் சிரட்டை இலைவகைகள், களிமண், நீர் | பாடுதல், அபிநயத்தில் ஈடுபடமுன்னர் சுத்தமானதொரு வீடொன்றைக் காட்டும் படங்கள் வாயிலாக உரையாடுங்கள் சுத்தமான வீட்டுத் தோட்டமொன்றின் மாதிரியொன்றை தயாரிக்க வையுங்கள்.<br>முறையாக அபிநயங்களில் ஈடுபடச் செய்யுங்கள். |
| வீட்டில் தினசரி பின்பற்றும் சுகாதாரப் பழக்கங்கள் பற்றி கலந்துரையாடுதல். | சித்திரங்கள், சுவரொட்டி, படப்புத்தகங்கள். | காலையில் எழுந்து நகம், பற்களைச் சுத்தம் செய்து தலை முடியை வாரி, உடை அணிதல். மலசலகூடம் சென்று சுத்தம் செய்து கொள்ளல் கைகளைக் கழுவிக் கொள்ளல், போன்ற பழக்கங்களை ஏற்படுத்த வழிகோலும். கலந்துரையாடல்களில் ஈடுபடுங்கள் தினசரி அதுபற்றிக் கவனித்து சுத்தமாக இருக்கும் பழக்கத்தை பெற்றுக் கொடுங்கள்.<br><br>கைகளைச் கழுவி உணவு உண்ணச் சொல்லுங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1993ல் செயல்பட்ட சுற்றாடல் கல்வி தலைமை கமிட்டி உறுப்பினர்கள்

தலைவர் : பேராசிரியர் ஐ. பாலசூரிய, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு.
உபதலைவர் : ஈ.டீ. நாணயக்கார - பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை.

பேராசிரியர் டீ. பஸ்நாயக, (ஓய்வுபெற்ற பேராசிரியர்) மருத்துவபீடம்.

பேராசிரியர் டீ.ஈ.எம். கொத்தலாவல,

ஓய்வுபெற்ற பேராசிரியர் (கல்வி) இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல

பேராசிரியர் உமா குமாரசுவாமி, தாவரவியல் பிரிவுத் தலைவர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல.

கலாநிதி சரத்கொடகம, சிரேஸ்ட விரிவுரையாளர், திறந்த பல்கலைக் கழகம், நாவல.

கலாநிதி தெல்மா குனவர்த்தன, பணிப்பாளர், இலங்கை தேசிய தொல்பொருள் காப்பகம்.

ஜே.பீ. ஹேரத், உதவி கல்விப் பணிப்பாளர், தேசிய கல்வித்தாபனம், மகரகம.

யூ..எம். அபேவர்த்தன, கல்விப்பணிப்பாளர் (விவசாயம்), கல்வி அமைச்சு.

தர்மசிரி கமகே, பிரதம உதவி ஆசிரியர், ஐக்கிய செய்திப்பத்திரிகை தாபனம்.

சரத் ஜெயவர்த்தன கருத்திட்ட உத்தியோகத்தர், தேசிய கல்வித்தாபனம், மகரகம.

# முன்பள்ளி சுற்றாடல் கல்வி உபகமிட்டி

தலைவர் :பேராசிரியர் டீ.ஈ.எம். கொதலாவெல, (ஓய்வுபெற்ற பேராசிரியர்) கல்வி. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

மயுரா குணசிங்க. வெளி விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

லயனல் குருப்பு, பணிப்பாளர் (ஆரம்பப் பிரிவு) தேசிய கல்வித்தாபனம்.

எஸ்.எச். விஜேரத்ன, கருத்திட்ட உத்தியோகத்தர்,
(ஆரம்பப் பிரிவு) தேசிய கல்வித் தாபனம்.

அசோக வீரசிங்க, நிறைவேற்றுச் செயலாளர்,
வாலிப கிறிஸ்தவர் சங்கம், கொழும்பு 03. (கண்டி டிரினிட்டி கல்லூரி ஆரம்பப் பிரிவின் முன்னாள் தலைமை ஆசிரியர்.)

# ஆசிரியர் அறிவுரைக் கைநூல் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டோர்

ஆலோசகர் சபை :பேராசிரிர் டீ.ஈ.எம். கொத்தலாவல, ஓய்வுபெற்ற பேராசிரியர் (கல்வி), இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

ஏ.கே. குணபால :- முன்னாள் பணிப்பாளர் (சுற்றாடல் மேம்பாடு) மத்திய சுற்றாடல் அதிகார சபை.

லலிதா பொன்சேகா - கருமமாற்று பணிப்பாளர் (சுற்றாடல் மேம்பாடு), மத்திய சுற்றாடல் அதிகாரசபை.

சித்ரா த. சில்வா -ஆலோசகர், சுற்றாடல் கல்வி, மத்திய சுற்றாடல் அதிகார சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய சுற்றாடல் அதிகாரசபை

தலைமையகம்
இல. 104, "பரிசர பியச",
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
தொலைபேசி: 2872361, 2872359, 2872415, 2872607, 2872297
தொலைநகல்: 2872300

மத்திய சுற்றாடல் அதிகாரசபை
உத்தியோகபூர்வ இணையத் தளம்
www.cea.lk

மாகாண அலுவலகம் - தென் மாகாணம்
இல.213, எஸ்.எச்.தஹநாயக்க மாவத்தை, காலி,
091-2233050

மாகாண அலுவலகம் - மத்திய மாகாணம்
பொல்கொல அணைக்கட்டு, பொல்கொல
081-2494884

மாகாண அலுவலகம் - சப்ரகமுவ மாகாணம்,
இல. 38, நாகொல்ல வீதி, கேகாலை.
035-2230449

மாகாண அலுவலகம் - கிழக்கு மாகாணம்,
இல. 304/1, மத்திய வீதி, திருகோணமலை.
026-2222779

மாகாண அலுவலகம் - வடமத்திய மாகாணம்,
பண்டுலகம, அநுராதபுரம்.
025-2225999

மாகாண அலுவலகம் - ஊவா மாகாணம்,
சைமன் பீரிஸ் மண்டபம், பதுளை.
055-2225305

மாகாண அலுவலகம் - வட மாகாணம்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
021-2225693

மாகாண அலுவலகம் - மேல் மாகாணம்,
இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
011-2865293

மாவட்ட அலுவலகம் - அம்பாறை,
2வது ஒழுங்கை, அம்பாறை.
063-2222192

மாவட்ட அலுவலகம் - அம்பாந்தோட்டை
மாவட்ட் செயவகம்
அம்பாந்தோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் வருங்கால சந்ததியினரின் முதுசமாகும்



மத்திய சுற்றாடல் அதிகார சபை,
இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.

Printed by Deepanee Printers

சுற்றாடல் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org